விலை சதம் 60 ☆ பக்கங்கள் - 10

பாவியுங்கள்!
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணு பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி


# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


உங்கள் அபிமானத்துக்குரிய
மில்க்வைற்
நீல சோப்
சம்பூரண சலவைக்கு
மிகவும் சிறந்தது
விலை ரூபா ஒன்று மட்டுமே
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED 1980 -2-26
PERIODICALS DIVISION

மலர் 22 | மாசி 12 | ரபி ஆகிர் 7 | ஞாயிற்றுக்கிழமை | (24—2—80) | இதழ் 14

# அமைச்சராகும் எண்ணம் எனக்குக் கிடையாது

## பாராளுமன்றத்தில் 'அமிர்'

(கொழும்பு)

இன்றைய அரசில் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் தமக்குக் கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் சபையிலே பசுகையில் குறுக்கிட்ட அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுக்குப் பதிலளிக்கும்வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

### விலைவாசிபோன்று மந்திரிகள் தொகையும் அதிகரிக்கிறது

இன்றைய ஆட்சியில் விலைவாசிகள் அதிகரித்துவருவது போன்று அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டேபோகிறது. என்றுமேஇல்லாதவாறு இன்றைய ஆட்சியில் 31 அமைச்சர்கள் பதவிவகிக்கிறார்கள் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவிக்கையில் குறுக்கிட்ட காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா- அடுத்த வாரம் அளவில் எமது அமைச்சரவையில் ஒரு மாற்றம் இடம்பெறவுள்ளது. அப்போது எதிர்க்கட்சித்தலைவருக்கும் ஒரு மந்திரிப்பதவி கொடுக்கலாம் என்று கூறினர்.

### சம்பள உயர்வு

விஷம்போல் அதிகரித்து வரும் விலைவாசி அதிகரிப்பைச் சமாளிக்க அரசாங்க, தனியார் துறைஊழியர்களுக்குசம்பளம் உயர்வு வழங்கவேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் ஒரு கட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

### பிரதமர் பதில்

இன்றைய அரசு பதவிக்கு வந்த பின்னர் 3 தடவைகள் சம்பள உயர்வு வழங்கியது. அவசியமானல் மீண்டும் சம்பள உயர்வு வழங்குவது குறித்து அரசு பரிசிலனை செய்யும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கூறினர். (இ)

## ரியூட்டரி மாணவி மரணம்: ராஜனை பொலிஸ் தேடுகிறது

(புலோலி)

ரியுஷனுக்குச் சென்ற 15 வயது மாணவி கமலாவின் மர்ம மரணம் தொடர்பாக ராஜ்குமார் என்ற இளைஞரை பருத்தித்துறைப் பொலிசார் தேடி வருகின்றனர். 25 வயது மதிக்கத்தக்க இவர் வீரப்பன் அல்லது ராஜன் என்றும் அழைக்கப்படுவாராம்.

இவருடன் தொடர்புள்ளவர் என்று கருதப்படும் ஒருவரைப் பொலிசார் ஏற்கனவே கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மொடர்ன்ஸ் கொமர்ஸ் ரியுட்டரி ரியுஷன் ஆசிரியர் உட்பட பலரை பொலிசார் ஏற்கனவே விசாரித்துள்ளனர்.

சடலம் கிடந்த இடத்துக் கருகில் கைலேஞ்சி. பர்ஸ் போன்றவற்றை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மாணவி அணிந்திருந்த காப்புகளையும் காதணிகளையும் காணவில்லை யென்று மரணவிசாரணையில் அவர் தாயார் ஏற்கனவே தெரிவித்திருக்கிறர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ் உதவி பொலிஸ் அதிபர் ஜனுப் நிஸாம், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கனகசபாபதி ஆகியோர் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### மாணவியின் உடலில் 150 காயங்கள்

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் மரணமான ரியூட்டறி மாணவி கமலாவின் உடலில் பல பகுதிகளிலும் 150 காயங்கள் இருந்தன. அரைக்குக் கீழ் காலிலும் தொடையிலும் 95 காயங்கள் இருந்தன.

யாழ் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணையின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை மஜிஸ்ரேட் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று நடைபெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

கைகள். கழுத்து வாய், உதடுகள் ஆகியவற்றில் 85 காயங்கள் இருந்ததாகவும் டாக்டர் கூறினர்.

(10-ம் பக்கம் பார்க்க)

## வானில் விமானம் எரிந்து 46 வீரர்கள பலி!

ஆக்ரா, பெப் 23

இந்திய விமானப்படைவிமானம் ஒன்று நேற்று பயிற்சியின் போது வானத்தில் தீப்பற்றி எரிந்து 46 பேர் பலியாகினர்.

ஆக்ரா விமானப்படை நிலயத்தற்கு அண்மையில் கடந்த இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது.

## வட்டு. லயன்ஸ் நடாத்தும் கைத்தொழில் கண் காட்சி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன இணைந்து நடாத்தும் தொழில் நுட்பக் கண்காட்சி அடுத்த மாதம் 3ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உற்பத்திப்பொருட்களை காட்சிக்கு வைப்பதற்கான ஏற்பாடுகளை பிராந்திய முகாமையாளரும், வட்டு. லயன்ஸ் உப தலைவருமான திரு. ஓரதர் செல்வராசா மேற்கொண்டு வருகிறர்.

ஏறக்குறைய ஐம்பது வீதம் விறகை மீதப்படுத்தக்கூடிய சிக்கன அடுப்பு, சாதாரண சூரிய வெப்பத்திலும் பார்க்கக் கூடிய வெப்ப சக்தியை சூரிய ஒளியிலிருந்து பெறக்கூடிய புதிய கருவி, தேவையான நேரத்தில் சடுதியாக தயாரிக்கக் கூடிய இடியப்பம், இரும்பில் செய்யப்பட்ட ஒற்றைக் கரத்தை வண்டில், தேங்காய் இளநீரிலிருந்து பெறப்பட்ட சாப்பாட்டின் பின்னர் உண்ணும் பதார்த்தம், சோயாப் பால், மாசி தயாரிக்கும் முறைகள் என்பனபற்றி கைத்தொழில் அபிவிருத்தி சபையினர் விளக்கமளிப்பர்.

இவ்விழாவில் கைத்தொழில் அபிவிருத்தி சபை பிராந்திய அபிவிருத்தி இயக்குநர் திரு. இரத்திநாயக்காவும் கலந்து கொள்வார்.

இக் கண்காட்சியில் கலந்து கொள்ள இதுவரை தம்மைப் பதிவு செய்து கொள்ளாத கைத்தொழில் ஸ்தாபனங்கள் திங்கட்கிழமைக்குள் தலைவர், பேராசிரியர் பாலன் செல்லையாவுடனே அல்லது செயலாளர், சட்டத்தரணி குணரத்தினத்திடமோ தொடர்பு கொள்ளவும். (கு)

## காபூல் நகரத்தில் கலவரம்: இராணுவச்சட்டம் அமுல்!

### அமெரிக்க பாகிஸ்தான்உளவாளிகளே காரணம் என்கிறது மாஸ்கோ

காபூல், பெப். 23

ஆப்கானிஸ்தானின் தலை நகரமான காபூல் நகரத்தில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களும்' வன்செயல்களும் இடம்பெற்றதைத் தொடர்ந்து அங்கு இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டுஉளவாளிகளும் சதித்திட்டக் காரர்களுமே இக்கலவரங்களுக்குப் பொறுப்பாளிகள் என்று சோவியத் ஆதரவிலான ஆப்கானிஸ்தான் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

காபூலிலுள்ள சிறிய கடைச் சொந்தக்காரர்களை அமெரிக்க மத்திய உளவறியும் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் பாகிஸ்தான் உளவாளிகளும் அச்சுறுத்தி கைலஞ்சம் பெற்று வந்ததாகவும் இதனுல் ஆத்திரமடைந்த சிறு கடைச்சொந்தக்காரர்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடாத்தியபோதே இக்கலவரங்கள் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் இக்கலவரத்தின்போது கைதானவர்களில் திரு. ஜெருபேட்லி என்ற அமெரிக்கரும் 16 பாகிஸ்தானியரும் இருந்ததாக மாஸ்கோ வானெலி இன்று செய்தி வெளியிட்டிருந்தது. இக் கிளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் புரட்சி நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்கள் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

### பாகிஸ்தானை நோக்கி துருப்புக்கள் விரைவு

இதே வேளையில் காபூலில் ஏற்பட்ட நிலையைத் தொடர்ந்து அங்கிருந்த சோவியத் துருப்புக்கள் பாகிஸ்தான்—ஆப்கானிஸ்தான் எல்லையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)




நகைப் பிரியர்களுக்கோர் நற்செய்தி!

யாழ். நகரில் உங்களுக்கான புதிய நகை நிறுவனம்
எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற
லலிதா ஜுவல்லறி
நாளை 25-2-1980 திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது என்பதை அனைவர்க்கும் அன்புடன் அறியத்தருகின்றேம்.
உங்கள் சகல நகைத் தேர்வுகளுக்கும் நினைவில் நிலைக்கப்போகும் உன்னத நிறுவனம்.

லலிதா ஜுவல்லறி
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து)
4999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனரல் றேட் கொன்சல்ரன்ற்

வருமானவரிக் கணக்கு, தொழிற்கந்தோர் ஊழியர் சேமலாபநிதி, இறக்குமதி ஆவணங்கள் போன்றன தயாரித்துக் கொடுக்கப்படும்.

301, 1/3,கஸ்தூரியார்வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம் (5044)



அருளுரை

மகராஜ்ஜியின் மகாத்மாக்களுள் ஒருவரும் பசுபிக் பிராந்திய ஆச்சிரம, அவுஸ்திரேலிய இணைப்பாளருமான

## விக்மாஷ்

இன்று வாழ்ந்துகொண்டிருக்கும்

சற்குரு - குருமகராஜ்ஜியிடமிருந்து

உங்களுக்கு செய்திகொண்டு வருகிறார்.

பகவான் - இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு, முகம்மதுநபி மற்றும் அவதார புருஷர்கள் உணர்த்திய அதே ஞான அறிவைக் குருமகராஜ்ஜி உணர்த்தி; இறைவன்; அமைதி; அன்பு; தெய்வீக உணர்வு; திருப்தி; மோட்சராஜ்யம் ஆகியவற்றை ஒருவன் சாதனை மூலம் தனக்குள் அனுபவிக்கவைக்கிறார்.

"இதற்கு வேண்டியது மனிதப்பிறவி மட்டுமே"

இன்று 24-2-80 ஞாயிறு மாலை 5-00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மகாத்மா அருளுரை நிகழ்த்துவார்

எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(5037) -தெய்வீக ஒளிச் சங்கம்.



சுற்றுலாவை மேற்கொண்டு இந்தியா வரும்போது உங்கள் பிடவைத் தேர்வுகளை விரும்பிய வர்ணங்களில் தேர்ந்தெடுக்க அழைக்கிறது!



## சிவராம்ஸ்-சென்னை

எல்லா விதமான வர்ணச் சேலைகள்

காஞ்சிபுரம், மைசூர், மணிப்புரி, பெங்களூர் சேலம், சின்னாளம்பட்டு, காஷ்மீர் வோயில்ஸ், பெட்சீட், துவாய், ஜமக்காளம்

இன்னும் பல

சென்னைமாநகரில் எழில்சேர்க்கும் புதிய நிறுவனம்

# சிவராம்ஸ்,

(முன்னைய யாழ்ப்பாணம் ரொலறம்ஸ் வியாபாரிகள்)

178, சேனு பஜார், காவல்துறை நிலையம் முன்பாக, சென்னை - 1 (4923)


## தவக்கால நற்சிந்தனை



### சோதனையை எதிர்த்து நில்லுங்கள்

(லூ. 4:1-11)

இயேசு பெருமானுக்கு அன்று நேர்ந்த சோதனைகள் இன்றும் நமக்கு நேர்ந்து கொண்டேயிருக்கின்றன. கிறிஸ்துவ அமைப்பு நமது அன்றாட உடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்ப்பது - முதற் சோதனை. வேண்டிய போதெல்லா வியப்பூட்டும் புதுமைகள் புரிந்து நம்மைக் கவருவார் என நினைப்பது - இரண்டாம் சோதனை. கிறிஸ்துவ வாழ்வில் உலக ஆசைகள், பதவிகள் முக்கியமா எனக் கேட்கிறது மூன்றும் சோதனை. எம் நிலை என்ன?

இயேசு தமது கடுந் தபசினால் சோதனையை வென்றார். அலகையின் சத்தியை தகர்த்தெறிந்தார். அவர் கொடுக்கும் பதில்: (1) நமக்கு உண்மையான உயிர் அளிப்பது இறைவனின் வார்த்தை. (2) அந்த இறைவனை நாம் அறிந்து அன்பு செய்வது விசுவாசத்தினால். (3) அவ்விசுவாச வாழ்வு உலக அரசுகள், பதவிகளை விட விலை உயர்ந்தது.

எனவே நாமும் அவர் காட்டிய வழியில் செப, தப, தருமம் என்னும் மூன்று ஆயுதங்களுடன் செயல்படுவோம்.

வண. மேரிபஸ்ரியன் அடிகள்


முருங்கன் களிமண் புலத்தில் இருந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு

தினசரி 200 தொன் களிமண் ஏற்றிக்கொண்டு வந்து தொழிற்சாலையில் விநியோகம் செய்வதற்கான விலைகோரல் மனுக்கள்

மேற்காணும் சேவையை மேற்கொள்வதற்கு கீழ்க்காணும் நியதிகள் நிபந்தனைகளின்படி காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை முகாமையாளரால் அரக்குமுத்திரை இடப்பட்ட விலைகோரல் மனுக்கள் கோரப்படுகின்றன.

அ. மேற்காணும் சேவையை மேற்கொள்ள விருப்பம் உடையவர்கள் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை முகாமையாளருக்கு விண்ணப்பிக்கவேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணம் ரூபா 50/- உடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஆ. விலைகோரல் மனுப்படிவங்கள் இம்மாதம் 27ம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 03ம் திகதி நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும்.

இ. 1980 மார்ச் மாதம் 10ம் திகதி 2மணிவரை மட்டுமே விலைகோரல் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொழிற்சாலை முகாமையாளர்.

5041


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மின்சார மோட்டர் H. P. 10, R. P. M. 1435 (Brush) விற்பனைக்கு உண்டு. 15/1, மின்சார நிலைய வீதி (ஆஸ்பத்திரி பின்புற மேல்மாடி) யாழ்ப்பாணம். 5046

தேநீர்சாலைக்கு உபயோகித்த 7 கலன் நீர் கொள்ளகூடிய கரண்ட் பொயிலர் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S. திருநாவுக்கரசு, 213, சண்டிலிப்பாய், அரியாலை. (மின்தறி நிலைய முன்பாக) 5047

எழுதுமட்டுவாளில் காய்க்கின்ற இளந்தென்னங்கன்றுக் காணி 20 பரப்பு விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 5042, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5042

புதிய 10 ஸ்ரீ 6977 ஹொண்டா (நைஜீரியன் மொடல்) விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். போல சண்முகம், இருபாலை கிழக்கு. 5039

தர்மபுரம் சுண்டிக்குளம் சந்திக்கு கிட்ட தோட்டக்காணி 10 ஏக்கர் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் வரவும். ஆ. ஐயம்பிள்ளை, நீலிபந்தனை, காரைநகர். 5006

### வாடகைக்கு

உடுவில் சரவணமுத்து ஒழுங்கையில் நான்கு அறை, மின்சாரம், தண்ணீர்வசதிகளுடன்கூடிய வீடும், வளவும் வாடகைக்குண்டு விபரங்களுக்கு: S. மகேஸ்வரஐயர், 359, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 5052

157, நாவலர் வீதியில் அமைந்துள்ள கடை (K.K.S வீதி நாவலர் சந்திக்கு அருகாமையில்) வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: 142, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5045

### தேவை

பூநகரி குறிச்சியைச் சேர்ந்த கிராஞ்சியில் தென்னந்தோட்டத்தில் வேலைசெய்ய ஆள் தேவை (மாதச் சம்பளம்). 'தைரியஸ்தான்,' 10-ம்நம்பர், செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் விபரம் அறியலாம். 4953

தந்தி தொலைத் தொடர்பு புதிய சட்டிடம் அமைப்புக்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவையாக உள்ளது. மேசன்கள், கூலியாட்கள், கட்டிடங் வேலைசெய்யக்கூடிய ஆசாரிமார்கள். உடன் தொடர்பு கொள்ளவும். S. கணேசரட்ணம் அன் பிறதர்ஸ், புதிய தந்தி தொலைத் தொடர்பு திணைக்களக்கட்டிடம், பண்ணை ரோட், யாழ்ப்பாணம். 5040

பயிற்சிபெற்ற மருந்து கலவையாளர்/பயிற்சிபெற விரும்பும் மருந்து கலவையாளர் இருபாலாரும் உடனடியாக விண்ணப்பிக்கவும். டாக்டர், மெடிக்கல் சென்ரர், ஆனைக்கோட்டை. 5010

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதும் மூலப்பொருள் இறக்குமதிப்பத்திரம் உடையதுமான கைத்தொழிலுக்கு பங்காளர் தேவை. வங்கிநிதி வசதியும் உண்டு. V.G. இன்டஸ்றீஸ், 220, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 5050

அச்சகத்தில் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தேவி அச்சகம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 5001


நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7199. தந்தி: வைரம்.



# கே. ஜி. கடுகதி பஸ் சேவை

1980 மார்ச் 1-ந் திகதி ஆரம்பம்

உங்கள் பிரயாண எல்லைவரை ஒவ்வொருவருக்கும் இருப்பிடவசதி கொண்ட ஓரளவு உல்லாசமான பஸ்வண்டிகள் உங்களை ஏற்றிச் செல்லும்.

வழி — ஆரம்பிக்கும் இடங்கள்

கொழும்பு – யாழ்ப்பாணம் (1-3-80 முதல்) – காமினி தியேட்டர் கொழும்பு – இரவு 8-00 மணி

யாழ்ப்பாணம் – கொழும்பு (2-3-80 முதல்) – வெலிங்டன் தியேட்டர் யாழ்ப்பாணம் – இரவு 8-00 மணி

பதிவு செய்தலும், ஆரம்பிக்கும் இடங்களும்

கொழும்பு – காமினி தியேட்டர், டார்லி வீதி, மருதானை (தொலைபேசி: 93810)

யாழ்ப்பாணம் – வெலிங்டன் தியேட்டர், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி: யாழ். 559)

டிக்கட்டுகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

கட்டணம் - ரூபா 50/- (ஐம்பது) - ஒரு வழி

## கே. ஜி. இன்டஸ்றீஸ்

இல. 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்த :- கொழும்பு - 10.

5038



Brownson

வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா

பிரவுண்சன் அரறூட் மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைத்துக் கொடுக்கும் மாடுகள்!

## துரை எங்கரசு

“எடி பிள்ளை செல்லம் உந்த மாடுகளை யொருக்கா அவிட்டு விடடி. விடிஞ்சும் இவ்வளவு நேரமாய் போச்சு. அதுகளை அப்ப அவிட்டு விட்டிருந்தா இத்தறுதி கொஞ்சமெண்டாலும் மேஞ்சிருக்குங்கள்.........”

பூரணம் மேளிட்டைச் சொல்லிப்போட்டு குசினி வேலையில் மும்முரமாய் இருந்தாள்.

பூரணத்துக்கு விடிஞ்சதும் முதல் வேலை இதுதான். தினசரி காலமை அடுப்பு நெருப்பு வேலை பார்க்கிற செல்லம் இண்டைக்கு வீட்டுக்கு விலக்கு. அதால பூரணம் குசினியுக்க முடங்க வேண்டியதாய் போச்சு.

பூரணம் இண்டு நேற்றல்ல அண்டைக்கு தாய் செய்த தொழிலைத்தான் அவளும் செய்யுறாள். கடையளுக்கு ஒடருக்கு இடியப்பம், பிட்டு அவிச்சுக்குடுக்கிறது. அவளின்ர வாழ்க்கைக்கு சிறிய ஆறுதலாகவும் இருந்தது.

பூரணத்தைக் கல்யாணம் முடிச்சவன் ஒரு ஒழுங்கான உழைப்பாளியெண்டால் அவள்ஏன் இண்டைக்கும்அடுப்புக்க கயங்கவேணும். அவனும் ஒரு போக்கிலி. கலியாணம் முடிச்சு பிள்ளையளைப் பெற்றுக் குவிக்க டடும் தெரியும்.

சின்னமணியன் ஒரு உழைப்பாளி எண்டுதான் பூரணத்துக்கு கலியாணம் செய்து வைச்சினம். அவன் ஒ... வாக்கரையெண்டோ; அல்லது ஒரு குடிகாறனெண்டோ ஆரும் சொல்லேல்ல...... வசதியில்லா மனிசர் பொம்பிளைப்பிள்ளையளை கணக்கப் பெத்தால் சாதி, சமயம் பாக்க முடியுமோ? அல்லது வசதி பார்க்கத்தான் முடியுமோ. ஆணுக்கு ஒரு பெண் கிடைச்சுவிட்டால் போதுமெண்ட நிலையில் தான் நடக்கினம்.

வசதிக்கேற்ற மாதிரி கலியாணத்தையும் செய்து வைக்கினம்......இந்த முறையில் தான் பூரணத்துக்கும் சின்னமணியனைக் கல்யாணம் செய்து வைக்கினம்.

அவன்ர நிரந்தரத் தொழில் சுருட்டு சுத்துறதுதான். ஒரு நாளைக்கு முக்கி, முனகி, ஐந்நூறு அறுநூறு மட்டில் சுத்துவான். இப்ப கொஞ்ச நாளா ஏதோ கூலிக் குழப்பமாம். அதால ஒருதரும் இன்னும் சுருட்டு வைக்கேல்ல. இந்த நிலை மேல சின்னமணியனும் ஒரு தொழிலுமில்லாமல் இருந்தான். ஆனால் பொழுதெல்லாத்தையும் கள்ளுக்கொட்டில்ல கழிக்கிறான். குடிக்கிறத்துக்கு காசு எங்க எடுக்கிறானோ தெரியேல்ல. அந்தப் பெட்டை செல்லம் தாய்க்குத் தெரியாமல் ஒளிச்சு வைக்கிறதுகள். இவனுக்குப் பசியாறக் கிடைக்குது போல......

அவள் முன்பு பல முறை காசு களவு போய் தேடியிருக்கிறாள்.

......பூரணம் எப்ப கலியாணம் கட்டினாளோ அண்டிலிருந்து இண்டு வரைக்கும் கண்ணீரோடதான் ழ்க்கை நடத்துகிறாள்.

...கொட்டுண்டு போவான் கொஞ்சநெஞ்சமா என்னை வருத்துறான். தன்ர குடிமதத்துக்கு ஏற்றமாதிரி சமைக்க வேணும், பல்லுக்குப் பதமா பொரியல், கரியல் செய்ய வேணும். உறைப்பு, புளிப்பு இருக்கவேணும். இல்லாட்டி அடிக்கிறான் - உதைக்கிறான்...

அவனுக்கெங்க, வீட்டு நிலமை தெரியப்போகுது. நான் ஒவ்வொரு வீடாய் உப்பெண்டும், புளி எண்டும் இரந்து திரியுறன்.

பூரணம் புறுபுறுப்பாள்.

அவனுக்கு நல்ல நம்பிக்கை. பூரணம் இடியப்பம், பிட்டு வித்தும், சீட்டுப் பிடிச்சும் காசு வைச்சிருக்கிறாள். பெட்டை செல்லம் நெசவுக்குப் போறாள். இவ்வளவு உழைப்பும் இருக்குத் தானே.

பூரணம் தனக்கு மூத்த தாய் பெடியன் பிறந்ததும் எவ்வளவு சந்தோஷ சந்தேகப் பட்டாள். தான் படுகிற கண் கலக்கத்தை வளர்ந்ததும் தீர்ப்பான் எண்டு நம்பினான் அவனும் வளர்ந்தான்; வளர்ந்ததுதான் மிச்சம். அவளின்ர ஆசையளெல்லாம் நிராசையாப்போச்சு.

......மூதேசியள் முளைக்குது முளைக்க முந்தி தலையால் நடக்கிறமென்னுதுகள். மூண்டாம் வகுப்போட பள்ளிக்குப் போகமாட்டான் எண்டுட்டான்......பிறகு சுருட்டுக்கு அனுப்பிவைச்சாள். தேப்பனோட அனுப்ப அவள் விரும்பேல்ல. அடுத்த வீட்டு சுப்பிரமணியத்தாரை கெஞ்சி மண்டாடி அனுப்பினாள். அந்தாளும் அவளின்ர பரிதாபத்துக்கு இரங்கிச்சிது. அத்தானின்ர முயற்சி போல அவனொரு நல்ல சுருட்டுக்காரனானான்.

......இண்டைக்கு இது சனியன் பிடிச்சு அலையுது......

......பூரணம் இதுமட்டுமல்ல இன்னும் என்னென்னமோ சொல்லித் திட்டுவாள்......புறுபுறுப்பாள்.

அவள் பெத்த பிள்ளையெண்டும் பாராமல் திட்டுவாள். அது அவளின்ர மனத்தாக்கத்தாலன்றி வீம்பாகவல்ல, காலமை தொடங்கினாளெண்டால் பெடியன் இரவு படுக்கைக்கு வருமட்டும் திட்டிக் கொண்டே இருப்பாள்.

அவனும் திட்டாமல் இருக்கிறதெண்டால் ஒழுங்காய் இருக்கவேணும். அப்பதான் பிள்ளையளெண்டு பற்று வரும், பாசம் வரும்.

அவன் உழைக்கத் தொடங்கியதும் தன்ர உழைப்பை தனக்காக்கத் தொடங்கிவிட்டான். வீட்டை மறந்திட்டான்!. தன்னை மினுக்கினான்......

இப்ப என்னடாவெண்டால் தியாகன்ர பெட்டை ராணியை கலியாணம் முடிக்க வேணுமெண்டு ஒற்றைக் காலில் நிற்கிறான். வியாதி முத்திப்போச்சு. இப்ப மெல்லம்மெல்லமா படுக்கையும் வைக்கத் தொடங்கிவிட்டான்.

இப்படிக் கொத்ததுகளை பெற்று வளர்த்து விடுப கோவன். ஆருக்கேன் அடியனடிச்சுக் குடுக்குதுகள். வீட்டிலேம் ஒருகுமர் வயது கடந்து இருக்குது. அவளை ஒரு கரை சேர்த்துப்போட்டு தான் நிம்மதியாய் போவமெண்டில்லாமல் நடக்குறான்.

அன்றாடம் பூரணம் பள்ளி எழுப்பும் நச்சரிப்புக்கள் மகனுக்கு மட்டுமல்ல, புருஷனுக்கும் தான். அதுகளும் எருமை மாட்டில மழை பெய்த மாதிரி கிடக்குங்கள். உணர்ச்சிகள், ரோசங்கள் இருந்தால் தானே......

சிந்திக்கிறதுக்கு......அறிவின்படி நடக்குறத்துக்கு.

......எடி!செல்லம் மாடுகளை அவிட்டு விட்டுட்டி......

பூரணத்தின் அதட்டலில் மிரண்ட செல்லம்!

......உனக்கு எத்தினைதரம் ஓமெண்டு சொல்லுறது...... இந்த அம்மா எப்பவும் எரிஞ்சபடிதான். கொஞ்ச நேரமெண்டாலும் அமைதியா, ஆறுதலா, சந்தோஷமாக கதையன். காதெல்லாம் அடைக்குது.

தாயைக் கண்டித்தாள். எதிர்த்து வாயும் காட்டினாள்.

......மனதுக்கள் மகிழ்ந்து கொண்ட பூரணம் கண்ணால் மகளைக் கூப்பிட்டாள். இரகசியமாகக் கேட்டாள்,

......எடி கொப்பரும், கொண்ணனும் சாப்பிட்டவி... தேத்தண்ணி ஊத்திக்குடுத் [illegible]

......எவ்வளவு அன்பாகக் கேட்கிறாள்.

எப்படியெண்டாலும் புருசனல்லவா.....

மனம் கல்லெண்டாலும் அவளுக்கு இரு பிள்ளையெல்லி ......அவளால் எப்படி அதுகளை வஞ்சிச்சு சாப்பிட முடியும். இல்லை: அதுகளை விட்டுட்டு ஒரு சொட்டு தண்ணிதன்னும் குடிக்க மனம்வரும்......

அந்தப் பெண்ணுள்ளம் இரங்குகிற அளவுக்கு அந்தக் கல் நெஞ்சங்களுக்கு தயவு இல்லை...... தாட்சணியம இல்லை. இரக்கமில்லை.........

இதைத்தான் வாழ்க்கை எண்ணுறது!

இதைத்தான் தலைவிதி எண்ணுறது!

தேப்பனும் தமையனும் வீட்டைவிட்டுக் கிளம்பின கையோட செல்லமும் நெசவுக்கு புறப்பட்டுவிட்டாள். சின்னன் இரண்டிட்டை அவிச்ச இடியப்பம் புட்டை தன்ர வாடிக்கை காரருக்கு கொடுக்கும்படி அனுப்பியிருந்தாள். பூரணம் அதுகளும் திரும்பிக்கொண்டிருந்ததுகள். மிச்சம் இரண்டோடசேர்த்து நாலையும் பள்ளிக்குப் போகும்படி விரட்டினாள். அதுகள் ஒண்டு சிலேற்றில்லை. கொப்பியில்லையெண்டு ஒற்றையிரட்டை பிடிச்சுதுகள்.

அவள் இறுமினாள்.

கெலிபிடிச்ச பூனையளாய் எல்லாம் பதுங்கத் தொடங்கிவிட்டுதுகள்..........இப்ப பூரணம்தான் தனிமையாய் வீட்டில் இருக்கிறாள். ஒரு கும்பாச்சட்டி நிரம்பிய தேத்தண்ணியுடன் புட்டைமென்று விழுங்கிக்கொண்டாள். அவளின் ஆறுதலுக்கு ஆதாரமாய் மண்திண்ணை பொறுப்பாயிருந்தது.

அந்தக்குடும்பம் இண்டைக்கு ஒரு நேரமோ இல்லை இரண்டு நேரமோ சாப்பிடுதுகள்.” ஊர்ப்பெண்டுகள் அவளைப்பற்றி எவ்வளவு விதமாய் விமர்சிக்கிறார்கள்...... ஏன் ஆம்பிளையள் கூட அவளைப்போல் ஓடியாடி ஒரு அலுவல் செய்யமாட்டினம்: அவள் ஆறு பிள்ளைப் பெத்தும் இண்டைக்கு உடம்பில ஒரு களங்கமில்லை.

பூரணத்தின்ர தோற்றத்திலும் ஒரு கவர்ச்சி இல்லாமலில்லை ... நேர காலத்துக்கு தலைக்கு வைக்க எண்ணெய் கிடைக்காட்டிலும் உருண்டு திரண்டு கருமைப்பூரிப்பில் அவளின் குடும்பி _ தலையில இருந்துமுட்டிவழியும்...பொது நிறமான கலர், அவள் எப்பவும் நீலக்கலர் லங்காச்சீலையும் ஒரு பச்சைச் சட்டையும் தான் போடுவாள். அது அவளை எவ்வளவு லட்சுமிகரமாய் காட்டும்...

வாயுக்குள்ள எப்பவும் வெத்திலை பாக்கை குதப்பிக்கொண்டிருப்பாள். இருந்தும் அவளின்ர சிரிப்பில் பொலிவிருக்கும்.

...பொழுதும் ரண்டு மணியாப்போச்சு. சின்னதுகள் இத்தறுதி பள்ளியால திரும்பியிருக்குங்கள் ... நானில்லையெண்டால் அதுகள் ஒண்டுக்கொண்டு பெலியெடுக்குங்கள்.

பூரணம் அவசரப்பட்டுக் கொண்டாள். கையில சேர்ந்த காசோட வீடு திரும்பினாள். சமையலுக்கான ஒழுங்குகளை தயார்படுத்தினாள். விளையாடிக்கொண்டிருந்த ரண்டைப் பிடிச்சு விறகு பொறுக்கிவர அனுப்பினாள். அதுகள் தங்கட விளையாட்டு இடையில குழம்பிப்போனதால் அழுதுகொண்டன. அவளின்ர அடிக்குப் பயந்ததுகள் தங்கட சாதனையை தொடர்ந்து நிலைநாட்டவில்லை. விறுக்கென்று கடகத்தை எடுத்துக்கொண்டு அடுத்த பனைவளவுக்கு ஓடினார்கள்.

பொழுது கொஞ்சம் வெள்ளனவாய் இருண்டுகொண்டிருந்தது. இது அதுக்குரிய காலந்தானே. மழைத்துளியளும் கொஞ்சம்கொஞ்சமாய் பொடுபொடுத்துக்கொண்டிருந்தது.

அவள் புட்டோடு சில எண்ணங்களையும் அசைபோட்டுக் கொண்டிருந்தாள்.

கைவிரல்களை மடக்கி எண்ணினாள். இன்னும் ஐஞ்சு பேர் இந்த மாத சீட்டுக்காசு தரேல்ல என்பதை உணர்ந்து கொண்டாள்.

உவளவை எப்பவும் உப்படித்தான். அதுக்கிள்ள மகே சிட்டை ஒரு வழிக்கு நாலு தரம் நடந்தாலும் தரமாட்டாள். அவள் ஏதோ எனக்குத் தாறதொண்ட நினைப்புப் போல.

ஒரு காலமும் நேரத்துக்கு தர வாறேல்ல.

சுத்தச் கஞ்சிலியள். இவளவ என்ன ஆட்டத்தில சீட்டுக்கட்ட வெளிக்கிட்டவளவியோ தெரியேல்ல.

சாப்பாட்டை முடித்துக் கொண்டவள் சீலையோட அப்பியிருந்த செம்பாட்டு மண்ணை துரைச்சுக்கொண்டு வெளியில் வந்தாள். ஒவ்வொரு வீடுவீடாய் ஏறியிறங்கத் தொடங்கிவிட்டாள்.

பூரணம் உலாவுறாள் எண்டால் ஒழுங்கையள் எல்லாம் ஒரே சத்தமாய்த்தானிருக்கும். ஒழுங்கையால் போற வாற எல்லாருக்கும் கதைசொல்லிக் கொண்டுதான் போவாள். சும்மாவெண்டாலும் அவளின்ர வாய் எதையோ பிதற்றிக்கொண்டுதானிருக்கும்...... சில பேர் அவளை “சூரி” எண்டு கூட ஏளனம் செய்யிறது அவளுக்குத் தெரியும்... அந்தளவுக்கு சுடுபிடியான வாய் அவளுக்கு.

“இவள் ஒரு நேரமும் ஓயமாட்டாள். எப்பவெண்டாலும் ஏதேனும் செய்துகொண்டுதானிருப்பாள்.

அவள் அப்பிடி ஆலாய்ப் பறந்து திரியுறத்தில தான்

நெசவால வீடு திரும்பிக் கொண்டிருந்த லட்சுமிக்கு இனமறியாத கலக்கம் அவள் மனதில். தன் நடையில் வேகத்தை கொஞ்சம் அழுத்திக்கொண்டாள்...

இண்டைக்கு எப்பிடியும் நல்ல மழைபெய்யப்போகுது. அதுக்கிடையில் மாட்டுக்கு ஓலை கிளிச்சுப்போடவேணும். நாளையான் சமையலுக்கான விறகுகளையும் பொறுக்கிப் போடவேணும்...இல்லையெண்டால் நாளையான்கடை யாபாரம் பட்டுது...

அம்மாவிட்டை திட்டுக் கேட்கேலாது...

செல்லம் வந்தது வரமுந்தியே உடுப்புகளை கழட்டி எறியத்தொடங்கிவிட்டாள். மேள் செல்லத்தைக் கண்டதும் தாய் பூரணம் மனதில் பூரிப்புடன்... அவளோட சேர்ந்து வீடுகளை ஒழுங்குபடுத்தினாள். விறகுகளை ஒதுக்கினாள்.

எடி மேன கறிசோறெல்லாம் இறக்கிப்போட்டன். அடுப்பில சொதிதானிருக்கு... இருண்டுபோச்சு மாடுகளைக் காணேல. நான் ஒருக்கால் போய்ப் பார்த்துக்கொண்டு வாறன்...

பூரணம் கதை சொல்லிக் கொண்டே ஒழுங்கைக்குள் பிரவேசித்துவிட்டாள். புருசன் தான் எதிர்ப்பட்டான்.

மொத்த வெறியில அவன் ஒழுங்கையோட ஒதுங்கிக் கொண்டிருந்தான். அந்தத் தோற்றத்தை அவள் எண்டைக்கும் காணுற காட்சி தான். ஒரு ஆம்பிளையை

(9ம் பக்கம் பார்க்க)

## வேண்டும் யாவும் வேண்டும்

குடிசை வாழும்
ஏழை மக்கள்
துயரம் தீரவேண்டும்
குடிசை யாவும்
மாறி மனிதன்
நிலையில் உயர்வு வேண்டும்
உழைத்து வாழும்
மனிதர் தம்மை
உலகம் போற்ற வேண்டும்
உழைப்பின் ஆட்சி
உலகம் தன்னில்
நிலைத்து வாழவேண்டும்
இழைத்தபோது
உழைப்போர் தம்மை
உலகம் காக்க வேண்டும்
உழைக்கும் மனிதர்
யார்க்கும் இங்கு
உயர்வளிக்க வேண்டும்
கல்வி அறிவு
பெற்ற மனிதர்
சொல்லின் தெளிவு வேண்டும்
எல்லை அற்ற
உலகம் எங்கும்
அமைதி நிலவ வேண்டும்
பசியைக் கண்டு
துடிக்கும் உள்ளம்
யார்க்கும் என்றும் வேண்டும்
பசியைப் போக்கி
பாரைக் காக்க
வேண்டும் யாவும் வேண்டும்

- வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய உலகில் இளையதலைமுறை - (27)

# காலத்தால் அழியாத கதாபாத்திரம் அந்தனி ஜீவா

**காவலூர் எஸ். ஜெகநாதன்**

தெளிவத்தை யோசப்பின் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்குப் போயிருந்தேன். கூட்டத்துக்குப் புறப்படப் பிந்திவிட்டது. பஸ்ஸில் அவதியோடு இருக்கிறேன். எதிர்ப்படுபவர் அந்தனிஜீவா. அதே தாடி. அதே விறுக்கான கோலம். என்னைக் கண்டதும் அவரிடம் பிடிபடும் வழமையான உற்சாகம். 'வெளியீட்டு விழாவுக்குத்தானே' என்கிறேன். 'சத்தியமா மச்சான் இலக்கியமும் வேணும் ஒண்ணும் வேணும். நான் அதெல்லாம் இப்ப விட்டிட்டன் ஆமா' என்கிறார். எனக்கு அதிர்ச்சி. இலக்கிய விஷயங்களை அலசத் தொடங்கியதும் 'ச்சா...ச்சா' என்று சப்புக் கொட்டிய டி விடாப்பிடியாகக் கதைக்கும் ஜீவாவுக்கு என்ன நடந்தது.

'எல்லாம் ஏமாத்து மச்சான். அதிலே மினக்கெடுகிற நேரம் ஆனந்தன் பந்தடிக்கிறதுக்கு கைதட்டிறது பிரயோசனம் ... நான் இறங்கப்போறன்... நீயும் வாறியா?' பூங்கா நெருங்கிவிட்டது. ஜீவா அவசரப்படுகிறார். 'என்ன நடந்தது உனக்கு...' நான் இழுத்துப்பிடிக்கிறேன். என்ன மச்சான் பிரயோசனம்...ஒரு புக்கசர்கூடப் போடாமல் ...'இப்போது மச்சானில் வலு நெருக்கம் என்னிடம் பெருமூச்சு. ஜீவா மட்டுமா இப்படி. ஈழத்தின் துடிப்பான கலைஞர்கள் எல்லாரும் இதே ஏக்கத்தில் தானே...ஜீவாவுக்கு இந்த இரத்த அமுக்கம் தலைநகரில் ஏதும் வெளியீட்டுவிழா நடக்கும்போது அதிகரிப்பதுண்டு 'காவலூர் நீ எனக்கொரு புத்தகம் போட்டுத் தர வேணும்' உரிமையோடு கேட்கிறார். நானென்ன வெளியீட்டாளனா? நானும் அவரைப் போலவே துடிக்கும் ஒரு எழுத்தாளன்தானே...இருந்தும் 'சரி செய்வம்' என்றேன். பூங்காவுக்கருகில் இறங்குவதையே மறந்துவிட்டார்.

'புத்தகம்போடுவம் பிறகு... முதல்ல உங்களோட கதைக்க வேணும். காலையிலே வீட்டுக்கு வாறன்' இக்கட்டுரைக்கு சில தகவல் பெறுவதில் எனது கவனம். விடைபெற்றுவிட்டார். மறுநாள் அதிகாலை-

கொழும்புக்குப்போகும்போதெல்லாம் இப்படி அதிகாலைகளில் ஜீவாவை வீட்டில் சந்திப்பது எனது வழக்கம். அந்நேரம் போனால்தான் நிதானமாக அகப்படுவார். தலைநகரின் இலக்கியச் செய்திகளை சுவை குன்றாமல் தருவார். ஜீவா ஒரு வஞ்சகமில்லாத கலைஞன் ஆற்றல்மிக்க கலைஞன். இந்த நாட்டின் சிறந்த நாடக நெறியாளர்களில் அந்தனி ஜீவாவும் ஒருவர் என்கிறார் விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன்.

'ஈழநாடு வாரமலர் அடிக்கடிதான் கிடைக்குது... சட்டுரை ரொம்ப நல்லா செய்யிறீங்க...முந்தியெல்லாம் தலைநகரில் இருந்து நிறையச்செய்திகள், ஆக்கங்களை அனுப்புவேன். கொழும்புக் கலைஞர்களை ஈழநாடுமூலம் அறிமுகம் செய்தேன்.' இப்படி இப்படி காணும்போதெல்லாம் ஈழநாடுபற்றி அக்கறையோடு கதைப்பவர். அன்று கதைத்ததோடு நிற்கவில்லை. சிலபிரதிகளையும் காட்டினார்.

என்னைக் கவர்ந்தது 'மலடு' சிறுகதை.

எழுத்தாளன் சண்முகம், மனிதனால் சுவாசிக்காமல் எப்படி வாழமுடியாதோ அவ்வாறே எழுதாமல் வாழமுடியாது என்கிற இலட்சியப் பிறவி. மகன் மரணவாயிலில் சாய்ச்சலால் துடிக்கிறான். மனைவி கமலம் சீறிப்பாய்கிறாள். இந்தப் பாழ்பட்ட எழுத்தைவிட கூலிவேலைக்கே போகலாம் என்று. மகனைக் காப்பாற்ற வழி. தன் நாவலின் பிரதியை எடுத்துக்கொண்டு பிரசுரகர்த்தரிடம் ஓடுகிறான். அவரோ ஏழை எழுத்தாளரின் கதையை வாங்கி தனது பெயரில் வெளியிடுபவர். பிள்ளை ஒருபுறம். கதை ஒருபுறம். நான் மலடல்ல, எத்தனை கதைகளையும் பிரசவிக்கமுடியும் என்று தன்னைத்தேற்றி நாவலைக் கொடுத்து பணம் பெற்றுவருகிறான் சண்முகம் குழந்தைக்காக.

'மலடல்ல என்றால் குழந்தையும் பெற்றெடுக்கலாம்தானே' என்று பகிடிவிட்டு நொந்த அவர் மனதை வேதனைப்படுத்த விரும்பவில்லை. மலடு தலைப்பைப் பார்த்தவுடன் என் நினைவுச் சுழிப்பில் வேறொன்று தினபதி தினச் சிறுகதைத் திட்டத்தில் ஒருவரே எழுதிய இரு கதையும் மலடிகளைப்பற்றியதாகவே இருந்தது. அப்போது விமர்சனம் செய்த ரகுமான் மலடுகளைப்பற்றியே சிந்தித்து அவர் கற்பனையும் மலடாகக்கூடாது என்றார். ஜீவாவின் கற்பனை வளம் மலடாகாததற்கு பின்னால் வந்த அவரது கதைகள் சாட்சி. குறிப்பாக-அ. ந. கந்தசாமி ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி'யில் பாராட்டுப் பெற்று சிரித்திரனில் வெளிவந்த 'புரூட் செலட்' என்ற சிறுகதை.

இதுவரை பத்துநாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியிருக்கும் ஜீவா அக்கினிப் பூக்களே தனக்கு ஆத்ம திருப்தயளித்தது என்கிறார். தொழிலாளருக்காக எழுதி தயாரிக்கப்பட்ட அந்த நாடகம் பதுளை மகாநாட்டில் பத்தாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு முன்னால் மேடையேற்றப்பட்டபோது தன் ஆத்ம சிலிர்ப்பை நினைவுகூருகிறார். அண்மையில் மத்தியவங்கி தமிழ் மன்ற நாடகப்போட்டியில் பாராட்டுப் பெற்ற பறக்காத கழுகுகளும் ஒரு புரட்சிப் படைப்பு. ஒரு எழுத்தாளன் இறந்தபின் சிலர் போடும் போலி வேஷங்களையும் ஏமாற்றுக்களையும் அம்பலப்படுத்துவதாக அந்நாடகம் அமைந்தது.

ஜீவாவின் பார்வைகள் எழுத்துலகத்தையும் கலைஞர்வாழ்வையும் பார்ப்பதாகவேயுள்ளது பெரும் குறை. அதுமட்டும் உலகம் அல்ல. சமூகத்தின்மீது அவரது பார்வைகள் விழுந்து படைப்புக்கள் உருவாக வேண்டும்.

காலத்தால் அழியாத கதாபாத்திரங்கள் என்று தலைப்பில் கிண்டல் செய்யும் அருமையான கட்டுரைகளை தினகரனில் எழுதினார். அக்காலத்தில் ஜீவாவைக் காணும்போது 'நீயும் அப்படியொரு பாத்திரம்'தான் என்று நட்புரிமையுடன் கிண்டல் செய்வேன். உண்மைதான். அந்த அப்பழுக்கற்ற கலைநெஞ்சத்தோடு பழகியவர்களுக்குத் தெரியும். அவரும் காலத்தால் அழியாத கதாபாத்திரம்தான். ஈழத்து இலக்கிய, கலை மேடைகளில் ......'புதிய வார்ப்புகள்' என்ற தலைப்பில் எழுத்தாளர் தகவல் தொடர் ஒன்றையும் அவர் எழுதினார்.

பேராசிரியர் வானமாமலை போன்றவர்கள் மதித்து கலை இலக்கியப் பெருமன்ற மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாக தன்னை அழைத்ததை பெருமிதத்தோடு நினைவுபடுத்திய அவர், அங்கு 'ஈழத்தில் தமிழ் நாடகம்' என்ற தலைப்பில் வாசித்த கட்டுரையை எடுத்துக் காட்டினார். அதைத்தான் நூல்வடிவில் வெளியிட வேண்டும் என்பது அவர் துடிப்பு. தமிழகம் சென்று வந்ததும் 'ஜெயகாந்தனைக்கண்டேன்' என்று ஒரு தொடர் எழுதினார். நாயக வழிபாடு என்று அவ்வேளை அது கண்டனம் பெற்றதுண்டு. அதை நினைவுபடுத்தினேன். நெஞ்சுக்கு நெருக்கமான, எனக்கு முதன்மையான பிடித்தமுள்ள ஒரு எழுத்தாளனை நான் புகழ்வதில் என்ன தவறு என்று கேட்டவர், தன்னை மறந்து ஜெயகாந்தன் புகழ்பாடத் தொடங்கிவிட்டார்.

நமது தடத்துக்கு கட்டி இழுத்துவர நான் பட்டபாடு. ஆரம்ப முதலே இடதுசாரி இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர் அந்தனி ஜீவா. அ. ந. கந்தசாமியை வழிகாட்டியாக வரித்துக்கொண்டவர்.

நாடகத்துறையில் நன்கு பெயர்பதித்த ஜீவா, வீரகேசரியில் முன்பு 'ராசாத்தி' என்ற சிறுவர் நாவல் ஒன்றும் எழுதியிருக்கிறார்.

ஓட்டல் ஒன்றுக்குப் போகிறோம். ஓடியோடி உபசரிக்கிறான் ஓட்டலில் வேலைசெய்பவன். விதம்விதமான உணவுப்பொருட்களை யெல்லாம் கொண்டுவந்து தருகிறானே. அவன் அதையெல்லாம் உண்ணமுடியுமா? அவனுக்கு ஆசை இருக்காதா? விடிந்ததில் இருந்து இரவு சாகும்வரை இயந்திரமாகவே ஓடி ஓடி உழைக்கும் அவனைப்பற்றி நம்மில் எத்தனைபேர் எண்ணிப் பார்க்கிறோம். வயிற்றை நிரப்பியாயிற்று. காசை எறிந்தாயிற்று. வெளியேறிவிடுகிறோம். ஆனால் ஜீவாவும் அப்படி வெளியேறிவிடவில்லை.

ஓட்டலில் வேலை செய்யும் பீட்டர் இயந்திரகதியில் இயங்குகிறான். நவநாகரீகப் பெண்கள் ஆடர்பண்ணுகிறார்கள் புரூட்செலட். அவன் கொண்டுவந்து வைக்கிறான். இயந்திரம் அவனுள்ளும் ஆசை எட்டிப் பார்க்கிறது. நங்கை அவள் நாகரீகம்என்றுமீதி விடுகிறாள். அந்த நாகரீசத்தை வாழ்த்தியபடி கழுவப்போகும் சாக்கில் அவன் ஆசையோடு உண்ணப்போய் 'திருட்டு ரஸ்கல் எத்தனை நாளா இந்தப் பழக்கம்' என்று முழங்கும் முதலாளியின் குரல்.

நாமும் நடுங்கிவிடுகிறோம். நம் கையில் இருந்த புரூட் செலட்டே விழுந்தது மாதிரி ஒரு தவிப்பு.

ஓட்டலின் வர்ணனை என்ன? ......பீட்டரின் தவிப்பு என்ன? நாலைந்து தடவைகள் வாசித்து உள்ளம் குமுறச் செய்த கதை இது. நாடக உலகில் மூழ்கிவிட்டார்தான் அந்தனி ஜீவா. நாலைந்து கதையாவது தாருங்களேன் இதே தரத்தில்.

## நான் அணைக்கும் பைரவியாள்

ஆனந்த பைரவி நான் அணைத்திடும் பைரவியாள்
அம்சத்வனி அமைந்த அழகிய ரூபவதி
கானமிசைத் தேடிவரும் நாயகியாள் - அந்தக்
கலையழகி எனக்கே தாரம் என் வசந்தானே!

நீலமணி அணிந்த நித்யகல் யாணியவள்
நாட்டை மகிழவைக்கும் ஜோதீஸ்வ ரூபிணி
காலமெல் லாம்இதயத் தர்பாரில் தானமர்ந்தே
கல்யாண வசந்தங்கள் பாடிவரும் ரஞ்சனியாள்

பானுமதி மாறிவரும் பாருலகம் போற்றிவர
மலயமா ருதம்போல மங்கலகீ தம்தருவாள்
தேனுகந்தே தெவிட்டிவிடத் தீங்குரலில்
தேவதையாள்
மனோலயம் மிகுகீதம் பாடும்மனோ ரஞ்சனியாள்

பூரணசந் திரிகாபோல் புன்னகைக்கும் சுந்தரியாள்
பூபாளம் தினம்பாடும் அவள்கௌரி
மனோகரியாள்
ஆரபிமா னம்வேண்டும் நான் அவளை மனங்கொள்ள
நாராயணி அருள்வாள் நல்லதுணை தருவாள்!!

"ஆனந்தபைரவி"

## இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும்வளர்ச்சியும்

# மத்திய வகுப்பும் சமூகமும்

**தி. வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)**

மத்தியவகுப்பிலுள்ளபெரும்பாலான மக்களிடம் அதிகாரத்தையும், அந்தஸ்தையும் பெறவேண்டுமென்ற ஆர்வம் வியாபித்து இருக்கவில்லை. பிரித்தானியர் இலங்கைச் சமுதாயத்தை கூட்டுறவு, மானிய அடிப்படையிலிருந்து போட்டியுள்ள வர்த்தக அடிப்படையிலான சமுதாயமாக மாற்றியமைத்தனர். பிரித்தானியரினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய மாற்றங்கள் சமுதாயத்திலே பாதிப்பை ஏற்படுத்தி, மத்திய வகுப்பின் எழுச்சிக்கு வழிவகுப்பனவாக அமைந்தன.

மத்திய வகுப்பில் அங்கம் வகித்த பல்வேறு பகுதி மக்களும் தங்களுடைய வளர்ச்சியடைந்த தேவைகளுக்கு ஏற்ப அரசாங்க, வர்த்தகதுறைகளில் போதியளவு உத்தியோகங்கள் வழங்கப்படாததையிட்டு அதிருப்தியடையத் தொடங்கினர். இத்தகைய அதிருப்தியானது மத்திய வகுப்பில் அங்கம் வகித்த சமூகங்களுக்கிடையே இன முரண்பாடுகள் ஏற்பட வழிவகுத்தது. இதன்காரணமாக இனவாதம் தவிர்க்க முடியாத மத்திய வகுப்புப் பிரச்னையாக 1943 ம் ஆண்டில் இருந்துவரத் தொடங்கியது. இப்பிரச்னைக்குரிய பிரதான காரணங்களாக பொருளாதாரக் காரணங்கள் இடம்பெற்றன.

பிரித்தானியர் இலங்கைக்கு வரமுன் சாதி அமைப்பானது சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக இருந்து வந்தது. மரபுவழி வந்த உயர்ந்தோர் குழாமாக வேளாளசாதியினர். (Govi-Gama) கருதப்பட்டனர். இவர்கள் சமூகத்தில் பிரதான சாதியினராக இடம்பெற்று, அதிகாரத்தையும், கௌரவத்தையும் நிலைநாட்டி வந்தனர். பிரித்தானிய ஆட்சியின் முற்பகுதியில் இவர்கள் பொறுத்து எந்த தீவிரமான மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. பிரித்தானிய அதிகாரிகள் சாதி அமைப்பு முறையை நீக்க ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்காவிடினும், அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள் மரபுவழிவந்த அதிகாரத்தையும், கௌரவத்தையும் பாதித்துப் பலவீனமடையச் செய்தன.

பிரித்தானியரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்களில் ஒன்று ஆங்கிலேயக் கல்லூரிகளை ஸ்தாபித்து, இலங்கை மக்களுக்கு மேற்கத்திய கல்வியை கற்பித்தமையாகும். இத்தகைய கல்வி முறையானது ஆங்கிலேயக் கல்விகற்ற ஒரு உயர்ந்தோர் குழாமை (English Educated Elite) இலங்கையில் உருவாக்க வழிவகுத்தது. இவ்வகுப்பினர் ஆங்கிலேயக் கல்வியினால் எழுச்சியடைந்து, செல்வாக்குப் பெற்றுத் தங்களுடைய தனிப்பட்ட சாதனைகளினால் மரபுவழிவந்த உயர்ந்தோர் குழாத்தின் சாதி அடிப்படையினால் வந்த அதிகாரத்தை எதிர்த்தனர்.

மரபுவழிவந்த உயர்ந்தோர் குழாத்தை (Traditional Elite) நீக்க மேற்கத்தையக் கல்விகற்ற, மேற்கத்தையமயமான, ஆங்கிலம் பேசும் புதிய உயர்ந்தோர் சமூகம் எடுத்த நடவடிக்கையைத் தீவிரமான சமூகமாற்றம் என்று கூறமுடியாது, ஏனெனில் மரபுவழிவந்த உயர்ந்தோர் குழாத்தின் குடும்பங்கள் மேற்கத்தைய கல்வியை முன்பே கற்று, புதிய உயர்ந்தோர் குழாத்தின் முன்னோடிகளாக விளங்கினர்.

1811-ம் ஆண்டிற்கு முன்னர் சிங்களப் பிரதானிகளின் இரு பிள்ளைகள் ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலைகளுக்கு அனுப்பப்பட்டு, பிரித்தானிய நிர்வாகத்தினுடைய முயற்சியினால் உயர் கல்வி அளிக்கப்பட்ட இலங்கையர்களாக விளங்கினார்கள்.

பிரித்தானிய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட அரசாங்க ஆங்கிலப் பாடசாலைகளில் மரபுவழி வந்த உயர்ந்தோர் குழாத்தின் பிள்ளைகளே முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரறிஞர் சேர். பொன். அருணாசலம்

# தமிழ் மக்களுக்கு அப்பெருமகன் ஆற்றிய தொண்டுகள்!

வரலாற்றுவாணர்
வை. முத்துக்குமாரசுவாமி

பேரறிஞர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தமிழ்ப் பெருமக்களுக்கு அருந்தொண்டுகள் ஆற்றினார். அவர் பல்மொழிகளில் வல்லவர். தமிழ்மொழியிலும் சைவ சமயத்திலும், தமிழ் பண்பாடு முதலியவற்றிலும் ஆழ்ந்த அறிவும் பெருக்கமும் உடையவர்.

பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் சிறப்பு உதவியுடன் டாக்டர் ஜி. வி. ப. போப் என்னும் ஆங்கில மேதை மாணிக்கவாசக சுவாமிகளின் பாடல்களையும் தாயுமான சுவாமிகளின் பாடல்களையும் ஆங்கில மொழியில் 1900ல் திறம்பட மொழிபெயர்த்து வெளியிட்டார். P. A. என்னும் இரு எழுத்துக்கள் அந்நூலின் முகப்பில் G. V. போப் அவர்களுடன் இணைந்துக் காணப்படுகிறது. அது பொன். அருணாசலம் அவர்களை ய கருதும்.

பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் வித்தகத்தை நாங்கள் பின்வரும் ஆய்வுக் கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் அறிந்து இன்புறலாம்.

(1) பொலன்னறுவை வெண்கலச் சிலைகள், (2) சிவ வழிபாடும், குறிகளும், சின்னங்களும், (3) முருகன்வழிபாடு, (4) கதிர்காமர்.

தமிழர்கள் சேமமாக வாழ்வதற்கு 1923-ம் ஆண்டு பொன் அருணாசலம் அவர்கள் இலங்கைத் தமிழர் சபை (The Ceylon Tamil League) என்னும் நிறுவனத்தை நிறுவினார். இது குறுகிய நோக்கத்துடன் நிறுவப்படவில்லை. இது உலகத்தமிழர் யாவரையும் பாஷை, பண்பாடு முதலிய முக்கிய இணைப்புக்களினால் இணைக்க ஏற்பட்டது.

அந்த அடிப்படையிலே தான் தமிழ்த் தேசிய காங்கிரஸ் என்னும் நிறுவனத்தை 1944-ம் ஆண்டில் மறைந்த தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் நிறுவினார். அந்தத் தாபனத்தில் ஒரு கிளையாகப் பிரிந்த இலங்கையின் காந்தி அடிகள் எனப் புகழ் பெற்ற மறைந்த தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் அரசுக்கட்சியைத் தொடக்கினார். தமிழரின் பல கட்சிகள் 1975 தொடக்கம் ஒன்றி விளங்குவதே ஐக்கிய தமிழ் முன்னணி ஆகும். இந்த நிறுவனங்களுக்கு எல்லாம் முன்னோடி பொன். அருணாசலம் அவர்களின் இலங்கைத் தமிழர் சபையாகும்.

### சைவசமயத் தொண்டுகள்

அருணாசலம் அவர்கள் 19-ம் நூற்றாண்டுக் கடைசி அளவில், கொழும்பு சைவபரிபாலன சபைக்கு ''இலங்கைச் சைவ பரிபாலனச் சபை'' எனப் பெயரிட்டு, சைவசமயத்தைப் பரப்ப முயற்சி எடுத்தார்.

கொழும்பிலே நாகரிகம் வளர்ச்சி பெற்ற ''கொழும்பு 7'' என்று கூறப்படும் ''கறுவாத்தோட்டத்திலே மத்திய இந்து சமய நிலையம்'' அமைக்கப்படுதல் அவசியம் என்று அருணாசலம் அவர்கள் கருதினார். அவர் விரும்பியவாறு ஒரு நிலையத்திற்கு ஒரு மையமான இடத்திலே அத்தகைய நிலையம் அமைக்க அகில இலங்கைச் சைவமாமன்றத்தால் அரசாங்கத்திடம் ஒரு காணி வாங்கப்பட்டிருக்கிறது. ஆயினும் கட்டிடம் இன்னும் அமைக்கப்படவில்லை.

அவர் வடகொழும்பிலே ஆனைக்குட்டிச் சுவாமி சமாதி வைக்கப்பட்ட பரிசுத்த பூமியில் அருணாசலேஸ்வரருக்கும் சொர்ணாம்பிகைக்கும் ஒரு சிவன் கோவில் 20-ம் நூற்றாண்டு ஆரம்பம் அளவில் அமைத்தனர். அக்கோவில் மண்டபத்திலே சேர். அருணாசலம் மகாதேவாவின்ஆதரவில் (இன்று அருணாசலம் மகாதேவா அம்மையாரின் காப்பாளராக ஆதரவு அளித்து வரும் வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 1953-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் திகதி வடகொழும்பில் உள்ள சைவப் பெரியார்கள் குறிப்பாக சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஆதரவில் சிவராத்திரி, நவராத்திரி முதலிய விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடியும், ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவசமய வகுப்புக்களை நடாத்தியும் கூட்டுப்பிரார்த்தனைகளை நடாத்தியும் சமயச் சொற்பொழிவுகளை அங்கு இடைக்கிடை நடைபெறுமாறு ஒழுங்கு செய்தும் சைவ சமய வளர்ச்சிக்கு அந்நிறுவனம் உதவுகின்றது. அருணாசலம் அவர்கள் ஆத்மசக்தி இதனைச் செய்விக்கின்றது என நாம் உன்னுகின்றோம்.

கொழும்பு விவேகானந்த சபையினருடன் அருணாசலம் அவர்கள் தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் நீண்டகாலம் தொடர்பு கொண்டுள்ளார். அச்சபையில் வாரமுடிவு நாளொன்றில் சைவ சித்தாந்தம் கற்பிக்க முதலியார் (வித்துவான்)சிற். கைலாசபிள்ளை அவர்களை ஒழுங்குபண்ணியிருந்தார். இவ்வகுப்பில் பண்டிதர் மயில்வாகனம்(பின்னர் சுவாமி விபுலானந்தா அவர்கள்) கற்றுவந்தார் என்பதைஅவர்வாழ்க்கை வரலாற்றில் இருந்து அறிந்துள்ளோம். இன்று இச்சபை சைவசமயப் பரீட்சைகளைச் சிறப்பாக நடாத்திவருகிறது.

### மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இலங்கைத்தமிழர்

சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்ற தமிழர் தமது அன்னை நாட்டை மறவாது இன்றும் வளம்செய்து வருகின்றனர், அந்நாட்டுக்கு இலங்கைத் தமிழர்கள் அந்தக் காலத்தில் (1905-1910) அருணாசலம் அவர்கள், பதிவுத் திணைக்களத்தில் மேலதிகாரியாகக் கடமையாற்றும் பொழுது மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு அங்குள்ள அரசாங்கசேவையில் சேரும்படி ஊக்கம் அளித்தனர். அங்கு அருணாசலம் அவர்களின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நண்பர் சேர் உவில்லியம் ரேயிலர்அரசாங்கத்தில் ஆணையுள்ள பதவி (The third of Resident General F. N.S. 1905-1910) வகித்துவந்தார். அவரே அருணாசலம் அவர்களிடம் இலங்கையில் உள்ள தமிழர்களைச் சேவையில் ஈடுபடச் செய்ய அருணாசலம் அவர்களிடம் வேண்டுகோள் அனுப்பினார். அங்கு சென்ற தமிழர்இலங்கையிலுள்ளகல்வி நிலையங்களுக்கும் பிறநிலையங்களுக்கும் சிறப்பு உதவிநல்கினர்.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இலங்கைத் தமிழர்' எஸ். துரைராசசிங்கம் பக்.39.

இலங்கைச்சீர்திருத்தச் சபையினதும் (1917) இலங்கை சமூக சேவைச் சங்கத்தினதும் இலங்கைத் தேசிய காங்கிரசினதும் (1919) இலங்கை தொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினதும் இலங்கைத் தொழிலாளர்சம்மேளனத்தின் முதல்தலைவராகத்திகழ்ந்தார்.

சுயபாஷைகளையும் உள்ளூர் சரித்திரம், பூமிசாத்திரம் பாடசாலைகளில் படிப்பிக்க வேண்டும்என்னும்இயக்கத்தை தொடக்கி வைத்தார். எங்கள் சமூகத்தில் உள்ள வசதி குறைந்த மக்களுக்குப் போதிய வசதிகள் அளிக்க முயன்றார்,

அருணாசலம் அவர்களின் இலங்கைச்சரித்திரக்காட்சிகள் (1906) அவர் எழுதிய கட்டுரைகள். ஞான ஒளி நித்திரை (1902)வெஸ்ற்மினிஸ்ரர் றெவியூவில் வெளிவந்தது. கண்டி மாகாணங்கள் (1910). பொலன்னறுவை வெண்கலங்களும் சைவ வழிபாடும் சின்னங்களும் (1915), முருகன் அல்லது கதிர்காமத்து ஸ்கந்த வழிபாடு (1924) வெளிவந்தது.

Madras Tamil Lexiconக்கு தமிழ்ச் சொற்களைச் சேர்த்து அனுப்பிவைத்தார், அதற்கு இணை ஆசிரியராக இருந்தார்.

(தொடரும்)

(புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களின் ஞாபகார்த்த தினத்தையொட்டி காரைநகர் மணிவாசகர் சபையாரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப் பதக்கம் பெற்ற கவிதைகளிற் சில)

# இன்றமிழ் காத்த இளமுருகன்

யாத்தவர்: மதியழகன்

தங்கத் தமிழ்த்தாத்தா தந்த தனிமரபு
மங்கா திருக்க வரமருளே - துங்கமிகு
போதமெய்ஞ் ஞானப் பொருளே கணபதியே
ஏதுகுறை எங்கட் கினி.

நடுநிலை வகித்து நின்ற நற்றமிழ்ப் புலவீர் போற்றி
மடுவணை உடைத்துப் பாயும் வண்ணமாய்க் கவிதை கொட்டும்
அடலிள முருகன் மேற்பா அறைந்திட என்நாக் கூசும்
திடமிலேன் எழுது கின்றேன் செய்பிழைக் கிரங்கு கின்றேன்

கவியிலை, கவியென் றென்னைக் கனவிலுங் கருத கில்லேன்
கவிசோம சுத்தரன் றன்கவி சிந்தா மணியே யான
கவியிள முருகன் மேலே கவிசில புகலு மென்றன்
கவிமுறை வழுவா வேனுங் கவியுளம் பொறுக்கு மாலோ

மன்னுபுகழ் நவாலியென வந்த வூரில்
வளர்தமிழைக் காத்தோம்பும் நல்லோர் ஏத்த
வன்னியசே கரனார்தம் மரபு வாழ
வடிவேலன் பதகமலம் வழுத்தி நின்றே
கன்னலன கவிபாடிக் குவித்த தங்கக்
காவலனும் தமிழ்த்தாத்தா கருதி யன்று
இன்றமிழை காக்கவென இசைவி னோடும்
இளமுருகன் எனுஞ்சேயை எமக்கே தந்தான்

இன்றமிழிற் சுவைமலியு மிலக்கி யங்கள்
ஏத்தமிகு புராணங்கள் இறைமேல் யாத்த
என்புருக்குந் திருமுறைகள் இசைமை குன்றா
இயற்றமிழின் இலக்கணங்கள் அனைத்தும் மாந்தி
மன்னுகவிப் புலமைதனில் வளமே கண்டு
வாரியிறைத் திட்டனனே அமிழ்தை மற்றும்
தன்னிகரி லாழ்த்தமிழின் தலைவ னென்று
தலைநிமிர்ந்து யான்பாடிற் றவறு முண்டோ?

(தொடரும்)

# வள்ளுவர் கண்ணோட்டத்தில் ஒரு பைபிள் உவமை!

அஞ்சலா அந்தோனிப்பிள்ளை

'தெருவோரங்களில் கூடிநின்றுவருவோர் போவோரை சொல்லாலும் செயலாலும் வேதனைப்படுத்தும் இளைஞர் கூட்டம் கூடிக்கொண்டே போகின்றது.'

நல்ல சமாரித்தன் கதை நாடெல்லாம் அறிந்த பைபிள் கதை. ஜெருசலேமிருந்து ஒருவன் யெரிக்கோ நகருக்குச் செல்லுகையில் கள்வர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனது ஆடைகளை முதலாய்ப் பறித்துக்கொண்டு அவனைக் குற்றுயிராய் விட்டுச் சென்றனர். அவ்வழியாகச் சென்ற ஒரு குரு குற்றுயிராய்க் கிடந்தவனைக் கண்டு விலகிச் சென்றுவிட்டார். அவ்வாறே லோவிலன் ஒருவனும் அவனைக் கண்டு ஒதுங்கிச் சென்றுவிட்டான். ஆனால் அவ்வழியால் சென்ற ஒரு சமாரியன் அவனைக் கண்டதும் மனமிரங்கி அவனண்டையில் சென்று அவனுக்குச் செய்யவேண்டிய 'முதலுதவி' எல்லாம் செய்து அவனை ஒரு சாவடியிற் சேர்த்து அவனைத் தொடர்ந்து பராமரிப்பதற்கான பண உதவியும் புரிந்து சென்றான்.

காயப்பட்டவனைக் கண்டு விலகிச்சென்ற குருவும், லேவியனும் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்நாட்டு மக்களிடையே உயர்வு மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர்கள். அவர்கள் தமது செல்வாக்கைப் பிரயோகித்து மற்றவர்களைக்கொண்டே கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு உதவி புரிந்திருக்கலாம். ஆனால் அவர்களோ அதைப் பற்றி நமக்கென்ன என்ற அலட்சியப் போக்குள்ளவர்களாக இருந்தனர். ஆனால் அன்னியனும் யூத மக்களால் தாழ்ந்தவன் எனக் கருதப்பட்டவனுமான சமாரியன், தன் இனத்தைச் சேராத ஒருவன் மட்டில் அதி அக்கறை உள்ளவனாக நடந்துகொண்டான்.''

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?'' என்றார் வள்ளுவர். அன்பு செய்வதற்கு இன மதவேறுபாடுகள் தடைக்கல்லாக இருக்கக்கூடாது என்பதை இவ்வுவமை மூலம் உணர்த்துகிறார் இயேசு.

ஆனால் உடற்புண்ணிலும் பார்க்க உள்ளத்தில் ஏற்படும் புண் பன்மடங்காக ஒருவனைப் பாதிக்கும் என்பதனை வள்ளுவர்,

''தீயினாற் சுட்ட புண்
உள் ஆறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.''

எனும் குறள் மூலம் எமக்கு நன்கு விளக்குகிறார். இந்நாட்களில் குற்றுயிராய் வீதிகளில் விடப்பட்டவர்களையோ, அவர்களைக் கண்டு அலட்சியமாக நடந்து கொள்பவர்களையோ நாம் காண்பது அரிது. ஆனால் வீதியோரங்களிலுள்ள சுவர்களிலும் மதில்களிலும் எழுதப்பட்டுள்ள வசைமொழிகளாலும் வரைப்பட்டுள்ள கீழ்த்தரமான கேலிச் சித்திரங்களாலும் வேதனைப்படும் உள்ளங்களோ அநேகம்.

இத்தகைய சித்திரங்களையும் சுலோகங்களையும் கண்டும் காணாதவர்போல் நடந்து கொள்ளும் குருக்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள், சமூகத் தொண்டர்கள், பொதுமக்கள் ஆகியோர் இவ்வுவமையில் கூறப்பட்ட குருவையும் லேவியனையும் போலவே பெரும்பாலும் நடந்துகொள்கின்றனர். இவைகளை அழித்துவிடவேண்டுமென்ற எண்ணம் சிலரிடம் எழுந்தாலும்.

''நல்லதுக்கு காலமில்லை
நமக்கெல்லாம் இடமில்லை''

என்ற மனப்பான்மையுடன் அதனால் வரக்கூடிய இன்னல்களை எண்ணி செயல்படாது இருந்துவருகின்றனர். மற்றவர்களுக்குத் தீமையை விரும்பாத நன்மக்கள் பெரும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## சிவானந்தன் பற்றி சில வார்த்தைகள்

'இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் நாடக அரங்கம்' என்ற நூலினை எழுதி அண்மையில் வெளியிட்டுள்ள திரு. இ. சிவானந்தன் பற்றி கலை இலக்கிய வட்டத்தில்பரவலாகப் பேச்சுக்கள் அடிபடுகின்றன, நல்ல நடிகராக, நாடகாசிரியராக, நெறியாளராக, விமர்சகராக மிளிரும் இவர் சிறந்த கவிஞரும் கூட. 'கண்டறியாதது' என்பது இவர் யாத்த கவிதை நூல். 'விடிவை நோக்கி' என்பது இவரது வெற்றி நாடகம். நாடகம் பற்றி பல்கலைக்கழகத்தில் படித்து 'டிப்ளோமா' பட்டம் பெற்ற இவர் நாடக எழுத்து, நடிப்பு இரண்டிலும் ஈடுபாடு கொண்டு கலைப் பணி புரிகிறார். 'இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்நாடக அரங்கம்' என்ற் நூல் அறிமுகவிழா கடந்த 16-2-80ல் யாழ். றிம்மர் மண்டபத்தில் பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் வெகு சிறப்பாக நடந்தது.

# கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

### எலும்புக்கூடு போதாது

மேற்படி நூல் பற்றிய ஆய்வு அரங்கில் பங்கு கொண்ட பேராசிரியர் கா. இந்திரபாலா, இந்த நூல் இலங்கைப் பல்கலைக்கழகம் அரை நூற்றாண்டாக தமிழ் நாடக உலகுக்கு செய்த சேவை என்ன? என்பதை விளக்குவதாய் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார். இருப்பினும் தனியச்செய்திகளை, தகவல்களை, நிகழ்வுகளை மட்டும் உள்ளடக்கியதாய் இராது அப்பாலும் சென்று ஆழ்ந்த ஆய்வினை உடையதாய் இருக்கவேண்டும். தனி எழும்புக்கூட்டினால் பயனில்லை தசையும் இரத்தமும் சேரவேண்டுமென்றார்.

### அரிய ஒரு முயற்சி

"நாடக ஆர்வலர்களுக்கு பெரும் பயன் தருவதாக இந்நூல் அமைந்துள்ளது, இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கின் ஆக்கபூர்வமான சேவைகளை ஆசிரியர் வகுத்துத் தொகுத்து அழகாக இந்நூலில் தந்துள்ளார். உரியவர்களைக் கண்டு செய்திகளைச் சேகரித்தல் அவற்றை மதிநுட்பமாக வரைவு செய்து எழுதுதல் என்பன எல்லாம் போற்றப்படவேண்டிய முயற்சி" என கலாநிதி அ, சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

### மூன்று சாதனைகள்

பேச்சு வழக்கை உரையாடலில் புகுத்தி சமூக உள்ளடக்க நாடகங்களைப் பேராசிரியர் க, கணபதிப்பிள்ளை எழுதியதன் மூலம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியமை, மரபு வழி நாடகங்களை அதாவதுநாட்டுக் கூத்துக்களைப் புடம் செய்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆடி அதன் சிறப்பை நாட்டிய வைத்தமை-பேணியமை, மேலாக மரபு வழி வந்த ஆடல் பாடல் வடிவங்களுள் புதிய சமுதாய பிரக்ஞை மிகு உள்ளடக்கங்களைப் புகுத்தி புதிய ஆக்கங்களை உருவாக்கியமை, ஆகிய மூன்று முக்கிய விடயங்களில் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கு புரிந்த காத்திரமான பணிகளை இ. சிவானந்தன் சத்திய அடிப்படையில் எழுதியுள்ளார் என ஏ. ரீ. பொன்னுத்துரை குறிப்பிட்டார். அண்மையில் நாடக அரங்கக் கல்லூரிப் போட்டிக்காகத் தயாரித்த 'பொறுத்தது போதும்' நாடகம் கொழும்பில் தரமான சுவைஞர்களால் பாராட்டப்பட்டதெனவும், தேசிய தமிழ் நாடக வடிவின் அச்சாணிபோல் இது அமைகிறதெனவும் அங்கே விமர்சிக்கிறார்களென்றும், இந்த அளவுக்கு நாடகம் வளர அ. தாசீசியஸ் போன்ற நாடக வல்லோரை இலங்கைப் பல்கலைக்கழக நாடக அரங்குதான் நமக்கு தந்ததென்றும் கூறினார். கர்ணன்போர், நொண்டி நாடகம், இராவணேஸ்வரன், வாலிவதை எனும் நாட்டுக்கூத்துக்களைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நவீனப்படுத்தி மேடையிடுவித்தமை தான் தொடர்ந்து வந்த வளர்ச்சிக்கும் அடித்தளம் இட்டது என்பதை மறக்கமுடியாதெனவும் குறிப்பிட்ட ஏ. ரீ. பொன்னுத்துரை அநுபவ ரீதியாக இம்மூன்று படிகளையும் எவ்வண்ணம் இலங்கைப் பல்கலைக்கழகம் வளர்த்தது என்பதை கண்ணாரக் கண்டேன் எனக் கூறி இந்நூல் உண்மையான தகவல்களை தருகிறது; முற்றிலும் பொருத்தமுடைய ஒருவரால் எழுதப்பட்டுள்ளது எனக் கூறினார்.

### எனக்கு 'டமில்' தெரியாது

எனக்கு 'டமில்' தெரியாது. ஏதோ 'பெடியன் தொங்குகிறாங்கள்' என்றெல்லாம் கொழும்பில் இருந்த தமிழர் பலர் பெருமையடித்துக் கொண்டிருந்த காலகட்டத்திலே, பல நாடகங்களை இலங்கை பல்கலைக்கழக அரங்கு மாணவர்கள் மூலம் மேடையிட்டு வெற்றி கண்டது. சிரமங்கள் மத்தியில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதெனினும் அதில் ஈடுபட்ட பலர் இன்றுபல்கலைக்கழகப் பேராசிரியர் களாக, விரிவுரையாளர்களாக, பத்திரிகை ஆசிரியர்களாக மிளிர்கிறார்கள் என குறிப்பிட்ட திரு. த. சண்முகசுந்தரம், திரு. இ. சிவானந்தன் முன்வைக்கும் இந்நூல் நல்ல ஒரு ஆக்கம் எனக் கூறினார்.

### ஊரரிசிப் புட்டா?
### பேக்கறிப் பாணா?

ஊரரிசிப்புட்டு, சோறு எங்கள் தேசிய உணவு. எமக்கு ருசியானது. ஆனால் நாம் பாணையும் உண்கிறோம். அதுவும் எமக்கு உரம் தருகிறது. அதற்காக பேக்கறியை வீட்டுக்குள் அமைக்கத் தயாரில்லை. நாம் வளாளது தேவையோ அதனை அரவணைக்கிறோம். அவ்வளவுதான் இந் நோக்கில் பார்க்கும்போது, மொழிபெயர்ப்பு நாடகங்கள் தேசிய தமிழ்நாடக வளர்ச்சிக்கு உதவ வல்லன என எம். சண்முகலிங்கம் அவர்கள் பேசினார். 'தழுவல்' நாடகத்தைப் புரியாமல் பலர் ஆண்கள் பெண்கள் தாராளமாக தழுவி தழுவி நடிப்பதுதான் இவ்வகை நாடகமென எண்ணுகிறார்களோ என்ற ஐயத்தை சில அரங்குகள் எனக்கு ஏற்படுத்தின எனவும் குறிப்பிட்டார்.

### அடித்தளம் இட்டேன் அவ்வளவுதான்

பல சிறப்புகளும் அடங்கிய இந்நூல் பதிக்கவேண்டிய கருத்துக்கு இன்னும் கூடிய அழுத்தத்தை கொடுத்திருக்கலாம் என திரு. சி. மௌனகுரு குறிப்பிட்டதைத் தொடர்ந்து நூலாசிரியர் பதிலுரைத்தார். 'நான் எலும்புக் கூட்டை வைக்கிறேன். காத்திரமான அத்திவாரத்தை இட்டுள்ளேன் இதனை வைத்துக் கொண்டு பலரும் தொடர்ந்து மாளிகை கட்டலாம். இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்குக்கு அப்பால் செல்லும் வகையில் இந்நூலை அமைப்பதென்றால் பல ஆண்டுகள் செய்யவேண்டிய பாரிய முயற்சியாகிவிடும். காலக்குறுக்கம் என்னைக் கட்டுப்படுத்தியது. பேராசிரியர் சு. வித்தியானந்தனின் ஆலோசனைகள் பல பெற்றேன். பேராசையுடன் சற்று கூடுதலாகவும் எழுத முனைந்தேன். விரிவான நூல்கள் வர இது தூண்டுகோலாய் அமையுமானால் மகிழ்வேன் என [illegible] இ. சிவானந்தன்.

---

பல்வைத்தியம் - 4

# பற் சூத்தையும் அதன் விளைவுகளும்

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

பற்களிற் சூத்தை ஆரம்பித்துவிட்டது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? இது எனது வைத்தியசாலையில் சிகிச்சைக்குவரும் நோயாளர்கள் அதிகமாகக் கேட்கும் கேள்விகளில் ஒன்று. பற்சூத்தை ஆரம்பத்தில் கண்களுக்குப் புலப்படாத அளவு சிறுபுள்ளியாக ஆரம்பிக்கிறதல்லவா! படிப்படியாகத் தாக்கம் ஏற்பட்டுச் சூத்தை பெருத்தவுடன் நாம் கண்ணாற் காணக்கூடியதாகவும் வைத்தியர்கள் ஆயுதங்களினால் கண்டு பிடிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. வெளிநாடுகளில் சிகிச்சைக்குச் செல்பவர்களின் எல்லாப் பற்களையும் எக்ஸ்-றே (X-Ray) படம்பிடித்து தேவையான வைத்தியத்தை உரிய காலத்தில் செய்கின்றார்கள். எமது நாட்டில் எல்லா நோயாளருக்கும் இவ்வித சிகிச்சை முறையைச் செய்யப் பல காரணங்கள் தடையாக இருக்கின்றன.

பற்சூத்தை பக்களின் மிளிரியைத் தாக்கும்போது அநேகமாக ஒருவித அறிகுறிகளும் தெரிவதில்லை. பன்முதலில் உணர்ச்சி நரம்புகளின் நுண்ணிய நார்கள் செறிந்திருக்கின்றன அல்லவா! ஆகையாற் பற்சூத்தை பன்முதலைத் தாக்கத் தொடங்கியதும் பற்கூச்சம் ஆரம்பிக்கின்றது. அளவுக்கதிகமான சூடு, குளிர், அமுக்கம் முதலிய நேரிடையாக உணர்ச்சி நரம்புகளின் நார்களைத் தாக்கத் தொடங்கக் கூச்சம். கொதி முதலியன உண்டாகின்றன. பற்சூத்தை மச்சைக்குழியை நெருங்க நெருங்க இவை அதிகரிக்கின்றன. அதைத் தாக்கியதும் வேதனை மிகுகின்றது. மச்சைக் குழியில் இருக்கும் பற்கூழைக் கிருமிகள் பழுதடையச்செய்கிறது. சிதற்பிடிப்பு ஏற்பட்டு மச்சைக் குழிக்குள் அமுக்கம் கூடியதும் கொதி வலி உண்டாகின்றது. இந் நிலையிலாவது வைத்தியம் செய்விக்காதுவிட்டால் பல் வேர் நுனியில் சிதற்பிடிப்பு ஏற்பட்டு அலகில் வீக்கமும் கொதிவலியும் ஏற்பட்டு (Dento-Alveolar absees) பல் அலகுக்கட்டை உண்டுபண்ணும்.

நோயாளிகள் சிலர் பல்-அலகுக் கட்டின் வீக்கமும் கொதியும் மாறும்வரை வைத்தியம் செய்வித்தும் பாதிக்கப்பட்ட பல்லைப் பிடுங்குவிக்காது இருப்பர், இப்பகுதி பழுதான பற்களை அகற்றுவிக்காது வைத்திருந்தால் வேர்நுனியில் இருந்து சவ்வு வளரக்கூடும். (Qranulona) இந்தச் சவ்வு நல்ல வேர்நுனியைச் சூழ்ந்திருக்கும். அண்ண இழையத்தை அரித்து அரித்து அலகு எதும்புக்குள் பெரியகட்டியாக (Dental cyst) வளர்ச்சியடைந்து சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலைமையை ஏற்படுத்தும்.

பற்சூத்தையினால் பற்கூச்சம், பற்கொதி, முரசு வீக்கம், அலகு வீக்கம் முதலிய தாக்கத்தின் தன்மையைப் பொறுத்து ஏற்படும். முரசு கடுத்தல், வாயுளைதல், தலையிடி, கண்உளைவு, காதுக்குத்து முதலிய அறிகுறிகளும் பற்கொதியைத் தொடர்ந்து ஏற்படலாம். பற்சூத்தை தொடங்கியவுடன் பல்வைத்தியரிடம் காட்டுதல் மிகுந்த பலனைக்கொடுக்கும். அறிவியல் வளர்ச்சியும் பல்வைத்திய ஏற்றமும் சிறந்துவரும் இந் நாளிலும், பலர் பல்நோய் கண்டவிடத்து வைத்தியரிடஞ் செல்ல அஞ்சுகின்றனர். இவர்களிடம் ஒரு பிழையான எண்ணம் இருந்துவருகின்றது. அது என்னவென்றால் பல்வைத்தியரிடம் சென்றால் கட்டாயம் பல்லைப் பிடுங்குவிக்கவேண்டி வரும். செல்லாதிருந்தால் வருத்தம் மாறாவிடினும் பற்கள் தம்மோடு இருக்கும் என்பதேயாகும். இன்னுஞ் சிலர் மேல்வாய் பற்களைப் பிடுங்குவித்தால் கண், மூளை, முதலியவற்றைப் பாதிக்கும் என்ற பிழையான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இது முழுவதும் அர்த்தமற்றது.

பற்சூத்தை தொடங்கியவுடன் வைத்தியரிடம் காட்டாது, நோய் முதிர்ந்து கடுமையான கொதி, வலி, வீக்கம், தலையிடி, கட்டுக்காய்ச்சல் முதலியவற்றால் தாங்கொணாத வேதனைவந்ததும் அவற்றைத் தாங்கமுடியாத கட்டாயத்தால் சிகிச்சைக்கு வரும் தொகையினரே இந்த விஞ்ஞான அறிவு மிகுந்த காலத்திலும்கூடுதலாகக்காணப்படுகிறது. பாதுகாக்கும் நோக்குடன் இடையிடையில் பரிசோதனைசெய்ய வருபவர்கள் ஒரு சிறு பிரிவினரே. இந் நிலை மாற பொதுமக்களுக்கு பல்வைத்தியம்பற்றியவிளக்கம் தேவைப்படுகிறதல்லவா? அடைப்பு மருந்துகளால் சூத்தையைக் கட்டுப்படுத்தி அடைக்கக்கூடிய காலத்தைக் கடந்தநிலையில் வந்தால் பற்களை இழக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பற்சூத்தையால் பாதிக்கப்பட்ட பற்களை எந்த நிலையிலும் பாதுகாக்க முடியும் என்பது பிழையான நம்பிக்கை. பற்சூத்தையை ஆரம்பகாலத்திலேயே அதை நிவிர்த்திசெய்து, கிருப்திகரமான சாதாரண பல்அடைப்பு மூலம் பாதுகாக்க முடியும். [illegible] வேண்டிய பற்களையும் நவீன பல்வைத்தியத்தின்மூலம்பாதுகாக்கலாம். பழுதடைந்த பற்களின் மச்சைக்குழியிலிருந்து பாதிப்புச் செய்த கிருமிகளை அழித்து, துவாரத்தைச் சுத்தம்செய்து ஒருவித விசேட அடைப்பு மூலம் (Nerve canal filling) பாதுகாக்க முடியும். இது ஒரு நுட்பமான வைத்தியமுறை. இதுபற்றி பின்பு விரிவாக ஆராய்வாம்.

ஆகவே பற்சூத்தை தொடங்குகிறதென்பதை அவதானித்ததும்உடனே பல்வைத்தியரிடம் சென்று அதற்குவேண்டிய சிகிச்சை எடுத்தல் அவசியமாகிறது. மற்றைய நாடுகளில் காணப்படும் பாதுகாப்புமுறைகளை இலங்கையிலும் ஏற்படுத்துவதற்கு நாம் முயலவேண்டும்.

(அ) ஒருவருடத்தில் இருமுறை அல்லது ஒருமுறையாவது தமது பற்களைச் சோதிப்பித்துப் பார்த்தலைக் கட்டாய பழக்கமாகக் கொள்ளுதல்,

(ஆ) பற்களில் ஏதாவது அறிகுறி தெரிந்தால் (உதாரணமாககுளிர்அல்லது சூடான பதார்த்தங்களை அருந்துகையில் கூச்சம் ஏற்படுவது) உடனே வைத்திய ஆலோசனையை நாடுதல்.

(இ) பற்களின் மேற்பரப்பில் சிறு குழிகள் அல்லது கருமையான கோடுகள் அல்லது உடைவுகள் காணப்பட்டால் உடன் உரிய சிகிச்சைபெறுதல் சில சிறந்த வழிகளாகும்.

(தொடரும்)

---

## வள்ளுவர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையினராக இருந்தாலும் அவர்கள் மற்றவர்களுக் ஏற்படும் இன்னல்களில் தம்மையும் பின்னிப் பிணைத்து செயல்படாதிருப்பதால், மிகச்சிறுபான்மையினராக விளங்கும் அன்பு வரண்டு போன ஒ[illegible]வரது கை [illegible]வுலகில் [illegible]ங்கி நிற்கக் காணலாம்.

இதனால் மறைவாக மதில்களில் எழுதுவோர் மாத்திரமன்றி, வெளி வெளியான வழியோரங்களில் கூடிநின்று தம் சொல்லாலும் செயலாலும் வருவோர் போவோரை எல்லாம் வேதனைப்படுத்தும் இளைஞர் கூட்டமும் கூடிக்கொண்டே போகின்றது. தமது காலத்தையும் இளமையையும் வீணே கழிக்கும் இவ்விளைஞர்கள் தமது வீட்டிலே பெற்றோரின் ஆட்சியைக் கவிழ்த்து தமது ஆட்சியை நிலைநாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். கைப்பற்றிய இவர்களை நாம் வீதிகளில் இவ்விதம் தமது பெற்றாரின் ஆட்சியை இலேசாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தமது சொந்த வீட்டிலேயே அன்பை அனுபவிக்க முடியாத இவர்கள் நமது அனுதாபத்துக்கு உரியவர்கள். வேதனைப்படுபவர்களையும் வேதனைப்படுத்துபவர்களையும் தகுந்த முறையில் அணுகி அவர்களில் அக்கறையுள்ள நவீன நல்ல சமாரித்தர்களாக நாம் விளங்க முயற்சிப்போமாக.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அறிவியல் கட்டுரை:

# கனவுகளே...... ஆயிரம் கனவுகளே ....

## கோகிலா மகேந்திரன்

'கனவிலேகூட நான் அப்படி நினைக்கவில்லை' என்றும், 'கனவிலேகூட நான் அதைச் செய்யவில்லை' என்றும் நாம் மற்றவர்களிடம் பேசும்போது சொல்லிக்கொள்வது மிகவும் சகஜமான விஷயம். ஆனால் ஓர் உளவியல் அறிஞர் குறிப்பிட்டதுபோல், எமது கனவுகளுக்காக எம்மைக் கைது செய்யமுடியும் என்று ஒரு சட்டம் இருக்குமாயின் எம்மில் பலர் இன்று கம்பி எண்ணிக்கொண்டிருப்போம். ஏன் என்று கேட்கிறீர்களா? கனவிலே ஒருநாள்கூடக் களவெடுக்காத - ஒருநாள்கூட இன்னொருவருடன் மோதிக்கொள்ளாதவர்கள் எம்மில் எத்தனைபேர்? நெஞ்சைத் தொட்டுப்பார்த்தால் தெரியும், ஒருவர்கூட இல்லை என்று! இந்தக் கனவுகள் வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளுகின்றன?

பல மனிதர்கள் கனவு நிலையில் அகப்படாத பல இன்பங்களைக் கனவில் அனுபவிக்கிறார்கள்.

கனவு கண்டதிலே ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை
எவனோ என்னகந் தொட்டுவிட்டான்
வினவக் கண் விழித்தேன்
சகியே மேனி மறைந்து விட்டான்
மனதில் மட்டிலுமே
புதிதோர் மகிழ்ச்சி கண்டதடி!

என்று பாரதி கண்ட காதல் பெண் கண்ணனைக் கனவில் கண்டு, உள்ளத்தில் மகிழ்வு கொண்டாள். இதனால்தானோ என்னவோ அசுவாரசியமான வாழ்க்கையில் அழுந்திக் கொண்டிருக்கும் பலர் அதிக நேரத்தை நித்திரையில் செலவழிப்பதை விரும்புகிறார்கள்.

### கனவில் நேரம்

எமது நித்திரை நேரத்தில் 20%பின் மூளைத் தூக்கநேரம் என்றும், 80% முன் மூளைத் தூக்க நேரம் என்றும் பாகுபடுத்தப்பட்டுள்ளது. பின் மூளைத்தூக்க நேரத்திலேயே கனவுகள் இடம்பெறுவதாகவும், இந்த நேரத்தில் விரைவான கண் அசைவுகள் போன்ற மாற்றங்கள் உடலில் ஏற்படுவதாகவும் நம்பப்படுகிறது. இந்த நேரத்தில் E.E.G. (எலக்ரோ என்செபலோகிராம்) யிலும் மாறுதல்கள் தோன்றுகின்றன.

### நிறங்கள்

கனவிலே நீங்கள் கவர்ச்சிகரமான பச்சை, சிவப்பு, ஊதா போன்ற நிறங்களைக் காண்கிறீர்களாயின், உங்கள் வாழ்வு திருப்திகரமானதாக இருக்கிறது. நீங்கள் வாழ்விலிருந்து நிறையவே பெற்றுக் கொள்கிறீர்கள், உங்களைச் சுற்றியுள்ள நிகழ்வுகளுக்கு நீங்கள் மிகுந்த உணர்திறன் உடையவராக இருக்கிறீர்கள் அல்லது உங்கள் வாழ்வில் மன எழுச்சிகள் சம்பந்தப்பட்ட நிலையில் உள்ளன என்பதே பெரும்பாலும் அர்த்தமாகும் என உளவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். நிறம் நிறமாய்க் கனவு காணும் மனிதர்கள் நல்ல அகநோக்கு உடையவர்களாய் இருப்பார்கள் என்றும் சிலர் கருதுகிறார்கள். பூஞ்சோலை, வெள்ளையாடை, வெண் பூமாலை, தாமரை, அழகியபறவைகள், இறைச்சி, இரத்தம், மஞ்சள், மாம்பழம், நீலோற்பலம்இவைகளைக் கனவிற்காணில் செல்வம், வாழ்வு, சுகம் உண்டாம் எனப் பஞ்சாங்கத்தில் கனவின் பலன் போடப்பட்டிருப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டுபோல் தெரிகிறது.

### நினைவு

ஒரு மனிதனின் நினைவாற்றலுக்கும் அவன் கனவுகளை நினைவு வைத்திருப்பதற்கும் எந்த விதமான தொடர்புமில்லை என்றே கருதப்படுகிறது. நாளாந்த வாழ்க்கையில் பெருமறதிக்காரனாக இருக்கும் ஒருவனுக்குக் கனவுகள் நினைவில் வருவது சுலபமாய் இருக்கலாம். தமது உள்மன உணர்வுகளைப் பற்றியும், பயங்கள் தகைப்புக்களைப்பற்றியும் அதிக அக்கறையுடையவர்கள் கூடுதலாகக் கனவுகளை நினைவுக்குக்கொண்டு வருகிறார்கள். தமது அடிமன உணர்வுகளை அமுக்கிவிட எத்தனிப்பவர்களும், மன எழுச்சிகளை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாதவர்களும் பெரும்பாலும் கனவுகளை மறந்துவிடுகிறார்கள்.

நனவு நிலையில் யதார்த்தங்களை நேருக்குநேர் சந்திக்கப் பயப்படுகின்ற பலநண்பர்களை, அவை கனவில் வந்து பிடித்துக்கொள்கின்றன. தனது பிரச்சினைகளில் இருந்து விடுதலை செய்வதற்காகப் பகல்நேரத்தின் பெரும்பகுதியை மது அருந்தலிலும், களியாட்டங்களிலும் செலவழித்துவிடும் மனிதர்களை அதே பிரச்சினைகள் நித்திரையில் வந்து தொல்லை கொடுக்கின்றன.

### பிரச்னைத் தீர்வுகள்

சில மனிதர்களின் சிறந்த சிந்தனைகள் நித்திரையிலேயே நிகழுகின்றன. கனவுகள் என்பதும் நாம் நித்திரையாக இருக்கிறபோது நிகழுகின்ற மூளையின் தொழிற்பாடுகள் தானே! நித்திரைக்குப்போகு முன்னர் ஒருவரின் மனதைக் குடைந்துகொண்டிருந்த ஒரு பிரச்னைக்கு... அவன் நித்திரை விட்டெழும்போது தீர்வுடன் எழும்புதல் ஒரு அசாதாரண நிகழ்ச்சியல்ல, எங்களில் பலருக்கு இதுபோன்ற அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில விஞ்ஞானிகளின் உலகப் புகழ்பெற்றகண்டுபிடிப்புக்களுக்குக் காரணமாயிருந்த சிந்தனைகள் கனவிலேதான் தோன்றியிருக்கின்றன. சைவசமயத்தின் புராணக் கதைகள் பலவற்றிலும் கூட சிவனடியார்கள் பிரச்னைகளுடன் நித்திரைக்குச்செல்லுவதும், கனவிலே அப்பிரச்னைகள் தீர்க்கப்படுவது மாய நிகழ்ச்சிகள் ஏராளமாய் இடம் பெற்றுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையார், சங்கிலியார் சம்பந்தப்பட்ட பிணக்குகள் எல்லாம் கனவுகளில் தானே தீர்க்கப்பட்டன! நித்திரையின்போது இவ்வளவு நுணுக்கமான சிந்தனைகள் நிகழ்வதாலோ என்னவோ நித்திரை என்பது விழிப்பின் இன்னொரு நிலைதான் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

### இனிய கனவுகள்

நித்திரைக்குப் போகுமுன் இரண்டு மணித்தியால நேரம் நீங்கள் எந்தவிதமான திரவங்களையும் அருந்தாது நித்திரைக்குப் போவீர்களேயாயின் உங்கள் கனவுகள் அதிகமாகவும், பல்வகையாகவும், சுவாரஷ்யமுள்ளவையாகவும் அமையும் என்று சொல்லப்படுகிறது. புகைபிடிக்கும் பழக்கம் உடையவர்கள் அந்தப் பழக்கத்தை நிறுத்திவிட்டாலும் நல்ல கனவுகள் தோன்றும் என்று நம்பப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் அல்லது நடுநிசியில் கனவுகண்டு விழித்துக்

(9-ம் பக்கம் பார்க்க)

# மத்திய வகுப்பும் சமூகமும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மரபுவழி வந்த உயர்ந்தோர் குழாத்திற்கும், ஆங்கிலேயக் கல்விகற்ற உயர்ந்தோர் குழாத்திற்குமிடையே நிலவிய அடிப்படை வேறுபாடு யாதெனில் மரபுவழிவந்த உயர்ந்தோர் குழாத்தின் ஆதிக்கத்திற்கு அவர்கள் பெற்ற உயர்ந்த அந்தஸ்து அடிப்படையாக அமைந்தது. ஆனால் ஆங்கிலேயக் கல்விகற்ற உயர்ந்தோர் குழாத்தின் வளர்ச்சிக்கு தனிப்பட்டோரின் சாதனைகளே அடிப்படையாக அமைந்தன. மரபுவழிவந்த உயர்ந்தோர் குழாத்தின் பிறப்பே முக்கிய இடம் வகித்து, பாடசாலைகளில் சேருவதற்கும் அது காரணமாக அமைந்தது. ஆங்கிலேயக் கல்வியின் வளர்ச்சி மேற்கத்தைய மயமான உயர் குழாம் இலங்கையில் எழுச்சி பெறுவதற்கு வழிவகுத்த பொதுப்பட்ட காரணியாக அமைந்தது.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டப் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து, கோப்பி, தேயிலை, றபர் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்தமையினால் வர்த்தகமும்விருத்தியடைந்து. அதன்காரணமாக போக்குவரத்து வசதிகள் ஏற்பட, அவற்றை மையமாகக் கொண்டு நகரங்கள் வளர்சியடைந்தன. இத்தகைய புதிய வர்த்தகப் பொருளாதாரமானது சாதி, உறவு முறைகளுக்கு அப்பாற்பட்டதாக செல்வத்தைப் பெறுவதற்கு தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கீழ்சாதியினர் தொழில் வல்லுனர்களாக உயர் ஸ்தானத்தை அடைந்து இதுவரை காலமும் வேளாள சாதியினரால் மட்டும் அனுபவிக்கப்பட்ட சலுகைகளை இவர்களும் பெறத் தொடங்கினர்.

இக்காலப் பகுதியில் பழைய பிரபுத்துவ அல்லது மானிய முறைக்குத் தொல்லை கொடுக்கக்கூடிய சம்பவமொன்றும் நடைபெற்றது. அது யாதெனில் 'கரவா' (Karava) பிரிவைச் சேர்ந்த ஸி. ஏச். டி. சொய்ஸா என்ற பெரும் தனவந்தர் எடின் பரோக் கோமகனை இராப்போசன விருந்துபசாரத்திற்கு அழைத்த பொழுது, பல வேளாள சமூகத்தினருக்கும் இவ் விருந்துபசாரத்திற்கான அழைப்பு அனுப்பப்பட்டிருந்தும், அவர்கள் இவ்விருந்துபசாரத்தைப் பகிஷ்கரித்தனர். இதற்கு முக்கிய காரணம் ஸி. ஏச். டி. சொய்ஸா 'கரவா' என்ற மீன்பிடிச் சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தமையாகும். இச்சம்பவம் அக்காலப்பகுதியில் நிலவிய சாதிக் கட்டுப்பாட்டின் இறுக்கத்தைத் தெளிவுபடுத்துவதாக அமைந்தது.

இலங்கையில் செல்வம் மட்டும் உயர்ந்தோர் குழாத்தின் அந்தஸ்தைத் தீர்மானிக்கவில்லை. அத்துடன் உயர்ந்தோர் குழாத்தின் முன்னோடிகள் அனைவரும் பிரித்தானிய கல்வியைப் பெற்றிருக்கவில்லை.

மேற்கத்தைய கல்வியானது தங்களுடைய சமூகத்திற்கிடையே ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதற்கும், புதிய அந்தஸ்தை வென்றெடுப்பதற்கும் இன்றியமையாததென்பதை 'கரவா' சமூகத்தினர் உணர்ந்திருந்தனர்.

இதன்காரணமாக இச்சமூகத்தினர் தங்களுடைய பிள்ளைகளுக்கு உயர்ந்த மேற்கத்தைய கல்வியை அளிப்பதற்காக தங்களுடைய செல்வத்தைப் பயன்படுத்தவும் பின்நிற்கவில்லை. இதன்பொருட்டு அவர்கள் பிரபல்யமான பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை அனுமதித்ததுடன், உயர்கல்வி பெறும் பொருட்டு பிரித்தானியப் பல்கலைக்கழகங்களுக்கும் அவர்களை அனுப்பினார்கள்.

ஆங்கிலேயக் கல்வியானது மேற்கத்தைய மயமாக்கத்தை எளிதாக்கியதோடு இலங்கை மக்களின் நோக்கங்களிலும், சிந்தனைகளிலும், வாழ்க்கை முறையிலும் தீவிர மாற்றங்கள் ஏற்படவும் வழிவகுத்தது.

(தொடரும்)

# அன்னைக்கு விண்ணப்பம்

நிலையிலா உலகம் தன்னை
நிலையதாம் பொருளென்றெண்ணி
அலையுமோர் மனத்தி னேற்கும்
அருள் செயும் தேவீ! நல்ல
கலைகளாம் ஆறு யாவும்
கலந்திடும் கடலே! அம்மா!
நலமிலா நினைவை உள்ளம்
நண்ணுங் கால் தடுத்தல் கேட்டேன்

நல்லன எனக்கும் செய்யும்
ஞானமோ சிறிதும் இல்லேன்
அல்லன விரும்புங் காலை
அன்னையே தோல்வி தாராய்!
நல்லன விரும்புங் காலை
நாடிநீ வெற்றி தாராய்!
தொல்லை செய் வினையைக்கண்டே
துணுக்குற்றேன் நடுக்கம் தீர்ப்பாய்

என்னேக்கின் படி பன்னாளும்
ஏகியே அடிகள் பட்டே
நின்னேக்கின்படி வாழ்தல் தான்
நிலைத்ததாம் இன்பம் என்ற
நன்னேக்கை இன்றே பெற்றேன்
நன்குள சின்னாளேனும்
நின்னேக்கின் படியே வாழும்
நீதிசேர் மனம் தாராயோ?

கங்கைநீர் இருப்பச் சேற்றுக்
கயத்திலே குளித்தல் செய்தேன்!
பங்கயம் இருப்ப நானே
பட்டிப்பூ பறித்தல் செய்தேன்!
தங்கமோ இருப்ப போலித்
தகட்டினைத் தலைமேல் வைத்தேன்!
இங்குயான் உய்தற் கேற்ற
எண்ணமே அருள்வாய் அம்மா!

—புலவர் ம. பார்வதிநாதசிவம்

## வரப்பெற்றோம்

நூல்: இந்துநாகரிகமும் பண்பாடும்.
ஆசிரியர்: த. இராமநாத பிள்ளை, பி. ஏ. (இலண்டன்) பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 7/-

ஓய்வுபெற்ற அதிபர் திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் தமது "இந்துநாகரிகமும் பண்பாடும்" என்னும் நூலிலே முப்பது உபதலைப்புக்களில் சிலபயன்தருவிடயங்களை எடுத்துக்கூறியுள்ளார், தமிழ் மக்களையும் சிறப்பாக இந்து மதத்தைத் தழுவியுள்ளவர்களையும் கவரத்தக்க வகையிலேயே இந்நூலை யாத்துள்ளார். வரலாற்றுத்தரவுகளைக் கூறுவதில் கண்ணுங் கருத்துமாகவிருந்த ஆசிரியர் தாம்கற்ற கல்வியின் துணையால் தமக்கு மிகவும் பிடித்தமான தமிழ் நூல்களையே நூலாக்கத்திற்குப் பெரிதும் துணைக் கொண்டுள்ளார். பழந்தமிழிலக்கிய நூல்களெனத்தகும் தொல்காப்பியம், இறையனார்களவியல், சிலப்பதிகாரம், புறநானூறு, பாரதம் போன்ற நூல்களுடனும் பெரியபுராணம், மநுதர்ம சாஸ்திரம், பிறபுராணங்களின் துணையுடனும்சில மேலெழுந்தவாரியான விளக்கங்களைக் கொடுக்க விழைந்துள்ளார். அவை வெறும் தரவுகளாக மட்டும் கொள்ளத்தக்கதாகவே மிளிர்கின்றன.

வரலாற்று விடயங்களை எடுத்துக்கூறும் பேரார்வம் சோழர்காலக் கலை, பண்பாட்டம்சங்களை முதன்மைப்படுத்தும் பணியாகவே அமைந்துள்ளது.

சமயச்சார்பான விடயங்களாகசிந்துநதிக்கரைநாகரிகம், நான்மறை, சாதிவேற்றுமையும் மனுதர்மசாத்திரமும், இந்துக்கல்வியின் மறுமலர்ச்சி, தமிழர் கோயில்கள், சைவ சமயப் பாரம்பரியங்கள், இந்துசமயத்தில் புதிய இயக்கங்கள் என்பன இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஒருகுறிப்புச் சொல்ல வேண்டும். அதாவது:

வரலாற்றுப் பெயர்களை ஆங்கில உருவத்திலுள்ள உச்சரிப்புக்களிலிருந்து தமிழ்ப்படுத்திய தன்மை ஏனைய வரலாற்று நூல்களிலுள்ளவற்றைப் போன்றல்லாது புதுமுறையாகவுள்ளது. பெருவழக்காகவுள்ள மொழி பெயர்ப்பு முறைகளை- நடைமுறைகளை நூலாசிரியர் மனங்கொள்ளாது விட்டுள்ளது ஒருகுறையே. தமிழ் மக்கள் மத்தியில் உலக விவகாரங்களையும்நிகழ்ச்சித் தரவுகளையும்அறியப்படுத்தும் நூலாசிரியர்ஓரளவு சிரத்தையுடன் மேலும் சிறப்பாகப் பொது மக்களும்- மாணக்கரும் புரிந்து கொள்ளும்படி எழுதினால் நூல் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

—நாவன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L தமிழிலக்கியம்

# இஸ்லாமியத் தமிழ்த் தொண்டில் உமறுப்புலவர் வகித்தபங்கு

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் படிகளில் இஸ்லாமியர்கள் ஆற்றிய பெருந்தொண்டு பதினேழாம் நூற்றாண்டளவில் முதன்மை பெறுகின்றது. பல்வேறு மதங்களும் தத்தம் கோட்பாடுகளை வரன்முறையாக வளர்த்துவந்த காலகட்டங்களில் இஸ்லாமியர்களும் தமது மதத்தினை நிலைநிறுத்த முனைந்து நின்றனர். தமிழ்நாட்டில் விஜயநகர நாயக்க மன்னர்களாட்சிக் காலத்து இலக்கியப் போக்கின் பொதுப் பண்புகளும், தாக்கங்களும் இஸ்லாமிய அறிஞர்களையும் பாதிக்கவே செய்தன. மடங்களும் ஆதீனங்களும் பல்வேறு பணிகளையும் முன்னின்று இயற்றிய காலகட்டத்தில் தான் தமிழ் பேணும் கொள்கையும் மதப்பிரசாரமும் தத்துவ விளக்க விசாரங்களும், முட்டிமோதும் நிலை எழலாயிற்று. விஜயநகர நாயக்கர் காலத்தினது இலக்கியப் போக்கான தத்துவசார்பு, வித்துவச் சிறப்பு; நம்பிக்கை வரட்சி போன்ற போக்குகளின் செல்வாக்கு அக்காலத்துக் கவிஞர்களனைவரையுமே இறுகப் பிணித்திருந்தது அது மட்டுமல்லாது வள்ளல்களைகளையும், ஆதர்ஷபுருஷர்களையும் நாடியே இலக்கியம் வளர்க்கவேண்டிய தேவையும் ஏற்படலாயிற்று. பழைய புராண இதிகாச வரலாற்றுச் சம்பவங்களையும், பிரச்சார ரீதியில் கதைமரபுகளினூடே எடுத்துக்கூறும் போக்கும் புலமையை முதன்மைப்படுத்தும் தன்மையும் வெகு சாதாரணமாகப் புலவர்களுள் விசாலித்தது. இந்த மரபின் இறுக்கமான பிடிப்பு உமறுப்புலவரிலும் காணப்படுகின்றது. இப்பிடியினுள் தன்னையே அமிழ்த்திக் கொண்ட உமறுப்புலவர் அக்காலத்தில் சீறாப் புராணம், முதுமொழிமாலை, நொண்டி நாடகம் என்ற நூல்களை இயற்றினர். இவற்றுள் சீறாப்புராணம் பாடிய வகையாலேயே எட்டயபுரம் உமறு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றார்.

உமறுப்புலவரியற்றிய சீறாப் புராணம் விலாதத்துக் காண்டம், நுபுவத்துக்காண்டம் ஹிஜ்ரத்துக்காண்டம் என்ற மூன்று காண்டங்களாகவும், தொண்ணூற்றிரண்டு படலங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளதுடன், ஐயாயிரத்திருபத்தேழு திருவிருத்தங்களையும் கொண்டது. பொருட்செறிவும், சொற்செறிவும் மிகுந்தது.

உமறுப் புலவரைப் பற்றிக் "கலைக்களஞ்சியம்" பின்வருமாறு விதந்தோதுகின்றது. "இவரியற்றிய சீறாப்புராணம் கவிநயத்துடன் திகழ்கிறது. இவரியற்றிய சிலதனிப்பாடல்களும், இவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் நொண்டி நாடகமும், முதுமொழிமாலையும் சொற்சுவையும் பொருட்சுவையும் பொருந்தி விளங்குகின்றன."

உமறுப்புலவரின் நுண்மாண் நுழை புலமும், சிறப்பாகத் தமிழ்க் காவியங்களிலூறிய தன்மையும் அவரது ஆளுமையின் சிறப்புமே அவரை எட்டயபுரத்துச் சமஸ்தான வித்துவான்களுள் முதல்வராக்கியது.

உமறுப்புலவரது சிறப்புக்கள் பற்றி எழுதிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் பின்வருமாறு எழுதுகின்றார்.

"உமறுப்புலவர் அச்சமஸ்தானத்தில் பெயர்பெற்ற கடிகைமுத்துப் புலவரின் மாணாக்கராகக் கொள்ளப்படுவர். அக்காலத்தில் வடபிரதேசத்திலிருந்து எட்டயபுரத்திற்கு வந்த வாலைவாருதி என்ற பண்டித சிகாமணியோடு வாக்குவாதம் செய்து வெற்றி அடைந்தவர். வள்ளலாகிய சீதக்காதி மரைக்காயருடன் பரிசுபெற்று வந்த கந்தசுவாமிப் புலவர், படிக்காசுப்புலவர் முதலிய பலவர் கூட்டத்தில் இவர் புலமை மிக்கவர்."

ஒப்பீட்டு ரீதியில் அக்கால அவைக்களப் புலவர்களுள் திறமையும் சிறப்பும் மதிப்பும் உடையவர் என்பதையும் அவரின் சமத்காரத் தன்மையையும் விளக்க மேலே கூறப்பட்டவரிகள் போதுமானவை.

மத சார்பான காவியமாகவும், மார்க்க போதனை நூலாகவும் பாடப்பட்டதே சீறாப் புராணம். அதனைப் பாடுவதற்குச் சீதக்காதி வள்ளலும் அபுல் காசிம் மரைக்காயரும் உதவிசெய்தனரென்பர். இதனால் இந்நூல் இஸ்லாமிய மதத்திற்கும், அதன் குர்ஆன் மரபு பேணுவதற்கும் எழுந்த நூல் எனல் பொருந்தும்.

சீறாவில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையினை மார்க்கத் தத்துவச் செறிவோடும் இணைப்போடும் கூறிச்செல்லும் உமறுப்புலவர் [illegible] வதற்குதவி செய்த [illegible] காசிம் மரைக்காயருக்கு நன்றி செலுத்துமுகந்தான் பலவிடயங்களிலும் அவரை மறக்காமல் நினைவுகூர்ந்து போற்றிப் புகழ்ந்துள்ளார். ஆகையினால் சீறாப்புராணத்தின் முகிழ்ப்பு ஒருவகையில் "கட்டளை நிறைவேற்றும் பணியினால்விளைந்த" தென்றே கூறத் தோன்றுகின்றது. இத்தொடர்பில் கம்பனுக்கு ஒரு சடையப்பவள்ளல் இருந்தமையும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

சீறாப்புராணம் அரபுநாட்டிலே நடந்த ஒரு சரித்திரத்தைக் கூறுவதாகும். உமறுப் புலவர் அந்த அரபு நாட்டைத் தமிழ்நாடாகவே கண்டார், மணற்பாங்கான நெடிய பாலைவனத்தைப் பசுஞ்சோலைவனமாக வருணித்தார், வேங்கை, சந்தனம், சண்பகம், அசோகு, குங்குமம், தேக்கு, நாரத்தை போன்ற வளமரங்கள் நிறைந்த நாடாகவே அரேபியா சீறாப் புராணத்தில் பொலிவுற்றுள்ளது. மான், மரை, யானை, புலி முதலிய மிருகங்கள் அங்குள்ள காடுகளில் உலவித் திரிகின்ற பான்

(9-ம் பக்கம் பார்க்க)

க. நாகேஸ்வரன் பி. ஏ. (சிறப்பு)

# கொரில்லா அரக்கன்

## அத்தியாயம்-21

வேலனுக்கு அருகில் அவன் எதிர்பாராதவகையில் வந்திறங்கிய புஷ்பக விமானத்திலிருந்து கேரளா மன்னன் ஈசாப் குள்ளன் இறங்கினான்.

வியப்படைந்த வெலன் மன்னரே! இங்கு எப்படி வந்தீர்கள்?' என்றான்.

'வேலா! உனக்கு நான் அன்பளித்த அதிசய மோதிரம் மூலம் உனது நிலைமையை அறிந்து உனக்கு உதவுவதற்காகவே இங்கு வந்தேன். கொரில்லா அரக்கனின் மாளிகைக்குத்தானே போகவேண்டும். விமானத்தில் ஏறிக்கொள்.'

ஈசாப் குள்ளன் இவ்வாறு கூறியபின்னரே வேலனுக்கு ஈசாப் குள்ளன் கொடுத்த மோதிரம் ஞாபகம் வந்தது!

தான் கைகளைப் பிசைந்த போதேஈசாப் குள்ளன்அளித்த அதிசய மோதிரம் உராய்வுப்பட்டு அவனுக்கு அறிவித்தல் கிடைத்திருக்கவேண்டுமென்பதையும் ஊகித்துக்கொண்டான் வேலன்.

'அரசே! இப்பொழுது எவராலும் அடையமுடியாத பாறைமீதுள்ள கொரில்லா அரக்கனின் மாளிகையை அடையவேண்டும்! சரி உங்கள் விமானத்திலேயே போகலாம்!' என்றான். பின்பு வேல

வி. சந்திரகுமார்

னும், ஈசாப் குள்ளனும் விமானத்தில் ஏறினர்.

மறுகணம் 'விர்' என வானில் கிளம்பி மாயவெளியின் மத்தியில் எவராலும் அடையமுடியாதபடி அமைந்திருந்த செங்குத்தான பாறை மீதிருந்த கொர்ரில்லா அரக்கனின் மாளிகையை அடைந்து விட்டது விமானம்.

விமானத்தை விட்டிறங்கிய வேலன் 'அரசே! நீங்கள் அந்த மறைவிடத்தில் இருங்கள். நான் மாளிகையினுள் சென்று நிலைமையை அறிந்து வருகிறேன்' என்றவாறு கொரில்லா அரக்கனின் மாளிகையினுள் நுழைந்தான்.

மாளிகையினுள் நுழைந்த வேலன் இவ்வுருவில் சென்றால் கொரில்லா அரக்கன் தன்னைக் கண்டுகொள்வான் என எண்ணி முன் ஏற்பாடாக சிங்கராஜாக் காட்டுத் தேவதை கொடுத்த மூன்று புட்டிகளில் பச்சைப் புட்டியை எடுத்து அதன் தைலத்தை உடலிலே பூசிக்கொண்டான்.

மறுகணம்...வேலனில் உருவம் மெல்லமெல்ல மங்கி பிறர் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோயிற்று!

மாயஉருவைப்பெற்றவேலன் இளவரசி தீபாவை மாளிகையின் ஒவ்வொரு அறையாகத் தேடிவரலானான்.

ஒரறையினுள் சோகமே உருவாக அமர்ந்திருந்த இளவரசி தீபாவைக் கண்ணுற்ற வேலன் திடுக்குற்றான். பின் அவளிடம் விரைந்துசென்று 'இளவரசியே! சுகமாக இருக்கிறீர்களா?' என வினவினான்.

திடீரென ஒரு புதிய குரல் கேட்டு தீபா சுற்றுமுற்றும்

(9-ம் பக்கம் பார்க்க)

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## உங்கள் திருமுகம்

மாணவர் எண்ணம் பகுதி அண்மைக்காலமாக மிகவும் புதுமெருகுடனும் புது அம்சங்களுடன் மிளிர்கிறது.

அண்மையில் வெளிவந்த முதற்பரிசு பெற்ற 'நாவலரின் கல்விப்பணி'க் கட்டுரை அருமை. அடுத்து தொடர்ந்து எமக்குப் பெருவிருந்து அளித்து வரும் 'கொரில்லா அரக்கன்' கதை நல்ல சுவையுடனும் சஸ்பென்சுடனும் சந்திரகுமார் எழுதுகிறார். எனது பாராட்டுக்கள். இதுவரை எந்தக்கதையிலும் இல்லாது புது அம்சங்களுடனும் நல்ல கட்டுக்கோப்புடனும் எழுதி வந்த இவர்வேலனுக்குகனவில்முன்பு தேவதை ஏதோ கூறியதாக கடந்த வாரம் எழுதியிருந்தார். அது பற்றி முன்பு குறிப்பிடவில்லையே.

'சூரியகிரகணம்' பற்றி படித்தேன். புதிதாக விஞ்ஞானம் படிக்கும்மாணவர்களுக்கு இது இலகுவாக விளங்கக்கூடியது. 'இலவசச் சிரிப்பும்' நன்றாக இருந்தது. அதிலும் சிறப்புச் சிரிப்பாக தேர்ந்தெடுத்தது சிந்தனையைத் தூண்டுகிறது. இதுபோன்று வாராவாரம் எமக்குப் பரிசு அளியுங்களேன், 'கண்டோஸ் மாமா'

செல்வி இ. கலைச்செல்வி
வேம்படி மகளிர் கல்லூரி.

## இங்கிலாந்து கிரிக்கட் வீரரின் உலகசாதனை

இங்கிலாந்து இளம் கிரிக்கட் வீரர் ஒருவர் இந்தியாவில் ஒரு புதிய உலகசாதனை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார்.

இந்திய மண்ணில் வைத்து இந்தியாவுக்கெதிரான பொன்விழா கிரிக்கட் டெஸ்டிலேயே இங்கிலாந்து வீரர் இயன் பொதம் இதுவரை எவருமே அண்மித்திருக்காத சாதனையை நிலைநாட்டினார்.

ஒரு டெஸ்டில் 'செஞ்சரி' எடுத்த பொதம், அதே டெஸ்டில் 10 விக்கட்டுகளுக்கு மேல் கைப்பற்றியுள்ளார்.

இந்த டெஸ்டின் முதலாவது இன்னிங்சில் 114 ஓட்டங்களைப் பெற்ற பொதம் அதே இன்னிங்சில் இந்திய 6 விக்கட்டுகளையும் 2-ம் இன்னிங்சில் 7 விக்கட்டுகளையும் மொத்தம் 13 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

இதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆசி-இங்கிலாந்து மூன்று டெஸ்ட் தொடரிலும் அபாரமாக விளையாடிய பொதம், இறுதி டெஸ்டில் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களை விளாசித்தள்ளி இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து இங்கிலாந்தைக் காப்பாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

ஏ. பாஸ்கரன்,
விக்டோரியாக் கல்லூரி,
சுழிபுரம்.

## மாணவச் சிரிப்பு!

அண்மையில் நீதி அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்ட கலாநிதி நிஸங்கா விஜயரத்தின, நீதித்துறையில் தாம் ஒரு மாணவனே என்று குறிப்பிட்டிருந்தார்ல்லவா? அதனை கருவாகக்கொண்டு மாணவமணிகள் எமக்கு அனுப்பியுள்ள துணுக்குகளை கீழே தருகிறோம்.

மாணவன்: இந்த அரசாங்கம் மாணவ சமுதாயத்தைப் பெருமைப்படுத்தியுள்ளது சார்.

ஆசிரியர்: ஏன் அப்படி கூறுகிறாய்?

மாணவன்: நீதிஅமைச்சராக மாணவர் ஒருவரைத்தானே நியமித்துள்ளது.

கே. மகேந்திரமோகன்
யாழ். இந்துக்கல்லூரி.

கல்வித்துறை மாணவன்: அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் எனக்கு கல்வி அமைச்சு கிடைக்கும் சார்.

விரிவுரையாளர்: அடுத்த அமைச்சரவை மாற்றத்திற்கிடையில் நீர் பட்டப்படிப்பை முடித்துவிடுவீரா?

மாணவன்: இல்லை. நீதித்துறை மாணவனுக்கு நீதி அமைச் சென்றால் எனக்கு......

செல்வி
லலினி நாயகம்,
சிறியபுஷ்ப மகளிர் ம.வி.
கரம்பன்.

நீதியமைச்சர்: நீதித் துறையில் நான் ஒரு மாணவன்.

மாணவன்: தமிழ் மக்களுக்கு அரசியலமைப்பில் நீதி வழங்கப்படவில்லை என்பது பற்றிப் பேசி தங்கப்பதக்கம் பரிசு பெற்றவன் நான். மாணவனுக்கு அமைச்சர் பதவியென்றால் நீதி பற்றி பேசி தங்கப் பதக்கம் பரிசு பெற்ற எனக்கு...?

க. நவநீதன்,
நயினாதீவு
மகாவித்தியாலயம்,

ஆசிரியர்: "இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்" என்று கூறியவர் யார்?

மாணவன்: அது பிழை சார். இன்றைய மாணவர்கள் இப்போதே அமைச்சர்களாகிவிகிறார்களே.

ம. இந்துமதி,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## மாவே நீ எங்கு சென்றாய்?

எண்ணத்திலே நினைப்பதனை உனக்கேயாக்கி
வண்ண வண்ணப் பலகாரம் மனத்திருத்தி
உண்ண உண்ண அலுக்காதகோதுமை மாவே
உன்னை நான் தேடுகின்றேன் எங்கு சென்றாய்?

நண்ணினோர்க் கருள்செய்யும் இறைக்குமேலாய்
தண்மை பெற்றே நீ மறைந்து செய்யும் ஜாலம்
உண்மையாய்ச் சொல்லுகிறேன் இனியும் வேண்டாம்
திண்ணமாய் வந்தெதிரே நிற்பாய் நீயே'

செல்வி ஜெயா ஞானசுந்தரம்
நடேஸ்வராக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
A GUN IN HIS SOCK, A TIRE IRON IN HIS BELT AND NO BADGE. THE STORY OF EDDIE. THE BEST EX-COP IN THE BUSINESS
**BADGE 373**
(Adults only)
Coming Soon: **CHINA TOWN**
**THAT MAN BOLT**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
நாகேஷ்-முத்துராமன்-ஜெயந்தி-சௌகார் ஜானகி
சுந்தரராஜன் நடித்த
**“எதிர் நீச்சல்”** (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K. பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க “இருவர் உள்ளம்”
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

**REGAL** JAFFNA. Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
A THRILLER WITH A DIFFERENCE
RAY BROOKS, JENNY HANLEY in
**“THE FLESH AND BLOOD SHOW”**
SEX — COLOR — STRICTLY FOR ADULTS

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
**எல்லாம் உனக்காக**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**ஊருக்கு உழைப்பவன்**
26 முதல் எடுப்பார் கைப்பிள்ளை

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
ராஜன் - சாவித்திரி
**வீட்டு மாப்பிள்ளை**

**SHANTHI** JAFFNA. Phone: 7642.
Daily 10-30, 2-30, 4-45, 7 & 9-30 p.m.
The Story of the Police Elite,—
“THE SEVEN-UPS”- The Dirty - Tricks Squad.
That even the Regular cops are afraid of!
**“THE SEVEN-UPS”**
Color
“ACTION” Never seen before on a Jaffna Screen!
Coming: WATCH OUT, WE'RE MAD!

## இஸ்லாமியத்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மையில் பாடுகின்றார். ஆறுகள் செழிப்பாய் ஓடுகின்றன என்பதும், எங்கும் பசுமையான வயல்கள் காணப்படுகின்றன என்பதும் அவரது கற்பனைக்கு நல்லெடுத்துக்காட்டுக்கள். இத்தகைய ஒரு மாற்றத்தை அரபு நாட்டுக்குக் கொடுத்துத் தமிழ் நாடென உருவகித்து வருணித்த புலவர் உமறுவின் திறன் பாராட்டத்தக்கதே.

பண்டிதர்களிடையே ஓரளவு பழக்கத்தில் இருக்கும் சீறு சாதாரண வாசகர்களிடையே நிலையான ஓர் இடத்தைப் பெறுமல்போனது வியப்புக்குரியதல்ல. 'சீறுப் பாடல்களில் விரவிக்கிடக்கும் அரபி, பார்சிச் (பாரசீக) சொற்கள் படிப்போருக்கு மலைப்பைக் கொடுத்திருக்கலாம்' என்று எழுதுகிறார் ஓர் ஆராய்ச்சியாளர்.

உமறுப்புலவரது சமயப் பிரசாரப்போக்கும், இஸ்லாம் மதம்பற்றிய தத்துவக்கதைகளும் அரபி, பாரசீகச் சொற்பிரயோகங்களும் இப்புராணத்தின் தோற்றப்பாடுகளுக்குரிய காரணங்களைத் துலக்குகின்றன.

ஞாலலாம் செழிப்புறவும், உலக அநீதிகள் அழிந்தொழிந்து மறையவும் தாம் கொண்டுள்ள மனவெண்ணமான குறைவும், கொலையும், வறுமையும், அநீதியும் அற்ற புனிதத்துவ சமுதாயத்தினைச் சிருஷ்டிக்கும் தலைவனாகவே நபிநாயகத்தை சித்திரிக்கும்முயற்சியில்இறங்கி அதில் தாம் புகுத்த விளைந்த கருத்துக்களை வெகு சாமர்த்தியத்துடன் செலுத்திவெற்றி கண்டுள்ளார் உமறு எனலாம்.

நபிகளைப்பற்றிக் கூறும் சந்தர்ப்பங்களிலெல்லாம் மனித இயல்புகளைக் கடந்த அமானுஷ்ய அவதாரத்தின் தோற்றப் பொலிவுச் சிறப்போடு சித்திரிக்கும் காட்சி, உமறுவினது மதம் பற்றிய ஆழமான நம்பிக்கையுணர்வைப் புரிய வைக்கின்றது.

கம்பரர்மாயண • சீறுப் புராண ஒற்றுமைப் பண்புகளை விளக்கும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 'கம்பன் கோசலத்தைத் தமிழ் நாடாக்கிஇராமனையும் தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமாக அமைத்தபோது இராமாயணம் தமிழ்க்கதையால் தமிழரிடத்தில் ஓடத்தொடங்கியது. அவ்வாறே உமறுப்புலவரும் ஞாலம் கா திருநாவலரும் அரபு நாட்டையே தமிழ்நாடாக்கி, எவனும் எல்லாமாகிய கடவுளையும் தமிழ்க் கண்கொண்டு கண்டு, இஸ்லாமிய உண்மைகளைத் தமிழ் [illegible]ணமும், தமிழிசையும், தமிழ்க்காட்சியுமாகப் பாடும்போது ஏழை எளியவனும்கூடத் தன்தாயை அறிவதுபால இஸ்லாமியத்தை அறிந்து இன்புறுகின்றான்' என்று கூறுகின்றார்.

இங்கு 'பாவனை நவிற்சி' (Imitation Expression) தமிழ்க் கவிகளிடையே இடம்பெறுவது ஒப்ப அனுமதிக்கப்பட்டு விடுகிறது.

சீறுவில் பல்வேறு இடங்களிலும் 'நபி' பெருமானைக் கூறும்போது 'பேரொளி' என்று கூறுவது பக்திநெறியின் உயர் பண்புஎன்றே கூறலாம்.

'பெருகிய கோடி சந்திரப்
பிரகாசமாய்
வருமொரு பெருங்கதிர்
மதியம் போலவே
கருணைவிற் றிருந்த செங்
கமலக் கண்ணினைத்
திரு நபி வருமவதாரஞ்
செப்புவாம்'

என்று அவதாரப் படலத்தில் தோற்றுவாய் செய்த உமறு, 'வழி கதிர் நபியென வந்த பேரொளி' என்றும், 'பேரொளி நபியாய்த் துலங்கவந்தவர் பெயர் முகம்மது' எனவும், 'மாமறைக் கொழுந்தை முகம்மது நபியை' என்றும் 'நறை கமழ்ந்தொளி ததும்பிய முகம்மது நபி' என்றும், 'மதியினுமொளிர் முகம்மது' எனவும், 'மறைதராச் சோதி முகம்மது நயினார்' என்றும், 'அந்தர வதன முகம்மதுநபி' எனவும், 'வரையெனத் திரண்ட புய நபி நயினார்' என்றும், 'ஞானமுங் கவினும் வளர்ந்து மேனி வந்த நபி முகம்மது நயினார்' எனவும் 'மறுமகன் மதியம் போன்ற முகம்மதை' என்றும் போற்றி-ஏத்திப் பாடியுள்ளார்.

முடிவாக உமறுப் புலவர் தாம் இயற்றிய சமயச்சார்பான நூல்களைவிட 'நொண்டி நாடகம்' என்ற நூலையும் எழுதினார் என்பது மனங்கொள்ளவேண்டிய தொன்றே எனினும்தாம்இயற்றிய சமயச் சார்பான நூல்களின்மூல ம 'செந்தமிழ் பேணி'த் தமிழ் இலக்கியப் பணிபுரிந்துள்ளார். உமறு சீறுப்புராணத்தினை மனங்கொண்டு பார்த்தால் கவியாற்றல், உவமைச்சிறப்பு, சொல்லாட்சி, கற்பனைவளம், இஸ்லாத்தின் மதக்கோட்பாடுகளைவலியுறுத்தும் பண்பு, காவிய இலக்கணங்களுக்கமையப் புராணம் பாடும்நெறி, புராணத்தின் 'பாவிகமான மார்க்க சிந்தனையின் தொடர்பறு இழையோட்டம், இடமறிந்து பயன்படுத்திச்செல்லும் பிரச்சாரப் போக்கு, சந்தத்தோடு இணைந்த கவிதா ஆற்றல் என்பன உமறுவின் ஆளுமையை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் பண்புகளாகும். இப்பண்புகளால் இன்றும் தமிழிலக்கிய உலகில் வாழ்பவர்தான் உமறுப் புலவர்.

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**குழந்தை உள்ளம்**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
வீரப்பா-அஞ்சலிதேவி
நம்பியார்
**நாக நந்தினி**
(புதிய பிரதி)

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனை நாளைக்கெண்டு காரிச் சுக்கொட்டுறது. அதுகளுக்கும் மான, ரோசம் இருந்தால் தானே பேசுறதும் காதிய உறைக்கும்,

அவள் விலகிச்சென்றாள்... அவள் இப்போது வயல் வெளிப் பாதையில நடந்து கொண்டிருக்கிறாள்.

மகன அந்தத் திருப்பத்தில தெனபட்டான். அவனுக்கு வசயப வளங்கிவிட்டது. இவனென் இதால வாறனெண்டு. தியாகறனறவீட்டை போட்டு வாறான். இப்ப தியாகரும் பண்டிலும் தோட்டம் துரவுக்குப் போயிருப்பினம். பெட்டை ராணிதான் தனிவ திப்பாள்...

அவளிட்டைதான் போட்டு வாறான். இவனுக்கு இவ்வளவு அக்கறை. நேரகாலைக்கு வீட்டை போவமெண்டு எண்ணமில்லை.

......மூதெசியள் எக்கேடு கொட்டாலும் பறவாயில்லை என்ன செய்யுறது பெத்துப் போட்டோம். பெத்த கடமைக்கு இருக்கும் வரைக்கு அடிச்சுக் கொடுப்பம்.

அவள் மன எரிச்சலில் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

மாடுகள் இன்னமும் அவள் கண்களுக்கு தென்படவில்லை... உரத்துக் கூவினாள்,

சில மாடுகள் அவளை விலத்திக்கொண்டு போகின்றன. உற்றுப் பார்க்கிறாள். அதற்குள் அவளின் மாடுகளைக் காணவில்லை.

மீண்டும் கண்களை கூர்மைப்படுத்திக் கொண்டாள்...

என்னுடைய மாடுகள் தான் செம்பளம்......

சிங்காரி......மயிலை......

வயிறுர மேஞ்ச சந்தோஷத்தில துள்ளிக்கொண்டு வருகின்றன.

அவளுக்கு எவ்வளவுக்கு அதுகள் உழைச்சுக் கொடுக்குதுகள்......

அவள் மனம் குளிர்ந்தது.

மாடுகளோடு ஒன்றாய் உழைக்கும் பூரணம் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருக்கிறாள்.

(யாவும் கற்பனை)

## கல்முனையில் த. இ. பேரவைக் கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

கல்முனைத் தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவை புனரமைக்கப்பட்ட பின்னர் நடைபெறும் மாதாந்த கருத்தரங்கு இன்று மாலை பிரதான வீதி, அருதோனப்பிள்ளை (ஆசிரியர்) இல்லத்தில் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கிற்கு கல்முனைத் தொகுதி அமைப்பாளர் திரு. இரா. பன்னீர்ச்செல்வன் தலைமை வகிப்பார். (கு)

## கொரில்லா......

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

பார்த்தாள். ஆனால் அங்கு எவரையுமே காணவில்லை! எப்படி தீபா காண்பாள்? வேலனின் மாய உருவம் தெரிந்தால்தானே?

தீபா தன்னைத் தேடுவது கண்டு வேலனும் அப்பொழுது தான் மாய உருவில் வந்திருப்பதை உணர்ந்து நீலப் புட்டியிலிருந்த அதிசயத் தைலத்தைத் தனது உடலில் பூசி மீண்டும் தன் சுய உருவை அடைந்தான்!

திடீரென தன்முன்னே ஓர் உருவம் தோன்றியதைக்கண்டு தீபா ஆச்சரியப்பட்டபடி இதுவும் கொரில்லா அரக்கனின் செயலோ எனப்பயப்படலானாள்.

தீபா பயப்படுவதன் நோக்கத்தை ஊகித்து அறிந்துகொண்ட வேலன் 'இளவரசியே பயப்படாதீர்கள்! நான் உண்மையில் கொரில்லா அரக்கனல்ல! நானும் நாகதீபத்தைச் சேர்ந்தவனே! உங்களைக் காப்பாற்றிச் செல்லவே அரசர் தீபராஜனின் அனுமதியுடன் இங்கு வந்தேன்!' என; தனது முழுக்கதையையும் கூறினான் வேலன்.

வேலனின் முழுக் கதையைக் கேட்ட தீபா ஆச்சரியப்பட்டாள். 'வேலா எப்படி எனது தந்தையுள்ளார்...?' என வினவினாள்.

'வேலா எனக்காக நீ இங்கு வந்துள்ளாய், ஆனால் இந்தக் கொடிய அரக்கனோ உன்னைக் கொன்றுவிடுவான்- எனக்காக நீ இறக்கவேண்டுமா? நான் இறந்தால்போகிறது! நீ தயவு செய்து இங்கிருந்து சென்று விடு!' என்றாள்.

'இளவரசியே! கவலைப்படாதீர்கள். நான் உங்களை மீட்காமல் திரும்புவதில்லை என சபதம் செய்துள்ளேன். அதற்கு உங்களின் உதவி தேவை...?'

'எனது உதவியா...? எப்படி...?' என வியப்புடன் கேட்டாள் தீபா.

(வளரும்)

## கனவுகளே......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டால் உடனே எழுந்து நினைவில் உள்ள கனவுகளை ஒரு சிறிய குறிப்புப் புத்தகத்தில் எழுதிவந்தால் ஒரு காலத்தில் அவை எமது அடிமன ஆசைகளையும், எதிர்பார்ப்புக்களையும், நிறைவுகளையும் படம் பிடித்துக்காட்டும் புத்தகமாக மாறியிருக்கும். செய்துபார்ப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

புதிய கீத்தா ஸ்டிப் கொலர்
ரவுன்ட்-பொயின்ட்-பொபி
சிறியது 2/- டசின் 18/-
பெரியது 2/50 டசின் 24/-

போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.

**சிக்கோ டிறேடர்ஸ்,**
43, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


# நேபாள மன்னர் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரும் நேபாள மன்னர் பிரேந்திரா ஷதேவ்வையும், மகாராணி ராஜ்யலக்ஷ்மி தேவியையும் ஜனாதிபதியும் அவரது பாரியாரும் விமான நிலையத்தில் வரவேற்பார்கள்.

இன்று பிற்பகல் 2-10க்கு கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடையும் மன்னருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படுவதுடன் 21 மரியாதைக் குண்டுகளும் வெடிக்கப்படும்.

இன்று மாலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் மன்னர் பேச்சுவார்த்தை நடத்துவார். (கு)


## நியூ கேம்பிரிட்ஜ்

திருநெல்வேலி சந்தி
யாழ்ப்பாணம்.

G. C. E. (O/L) தட்டெழுத்து,
சுருக்கெழுத்து, ஆங்கிலம்,
I. B. K, I. A. A. London Exam
றேடியோ பயிற்சிசெய்முறையுடன்
6 மாத வகுப்பு
Advanced & Spoken English
புதிய மாணவர்கள்
சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள்.
விபரங்கட்கு:
நிர்வாகி M. P. நாதன்.


## பொதுக்கூட்டமும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

விடிவு பத்திரிகை நடாத்தும் பொதுக் கூட்டமும் கலைவிழாவும் இன்று, ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டு அரங்கில் 'விடிவு' பத்திரிகை ஆசிரியர் திரு. ஏ. லோறன்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் எம். பி. கு. வி. தர்மலிங்கம், மாவை சேனாதிராசா, திரு. சாரங்கன், வீ. ஏ. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (கு)


### விற்பனைக்கு

நல்லினக் கறவைப் பசுக்களும் சினைப்பட்ட பசுக்களும் விற்பனைக்குண்டு. தினமும் மாலை 4-30க்குப்பின் தொடர்பு கொள்ளலாம். 97, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 5058


## எஸ். எஸ். ஆர். ராஜினாமா!

(சென்னை)

அ. தி. மு. கழகத்தின் பிரபல உறுப்பினரான திரு. எஸ். எஸ். இராஜேந்திரன், தமிழ்நாடு தேசிய சேமிப்பு மாநில ஆலோசனைச் சபையின் துணைத் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

தமிழ்நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நிலை காரணமாகவே தாம் ராஜினாமாச் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். (கு)

## ராய்பரேலியில் இன்று தேர்தல்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கடந்த லோக சபைத் தேர்தலில் வெற்றி பெற்று ராஜினாமாச் செய்த ராய்பரேலி தொகுதி உட்பட 5 லோக சபைத் தொகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெறுகிறது. (இ)

## 3 சில்லு சைக்கிள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

'வலது குறைந்தோருக்கு வாழ்வளிக்கும் திட்டத்தின் கீழ், யாழ். லயன்ஸ் கழகத்தினர் நாளை மாலை வான் விபத்தில் இரண்டு கால்களும் ஊனமுற்ற உரும்பராயைச் சேர்ந்த திரு. கே. டபிள்யு. சின்னையாவுக்கு மூன்றுசில்லு சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

இவ்வைபவம் ஈழநாடு காரியாலயத்தில் நடைபெறும். (கெ)

## ரியூட்டரி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவியின் சில உறுப்புக்கள் இரசாயன பரிசோதனைக்காகக் கொழும்புக்குஅனுப்பப்பட்டுள்ளன.

மரண விசாரணை நாளை திங்கட்கிழமை தொடர்ந்து நடைபெறும்.

இறந்தவரின் நெருங்கிய உறவினரான முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் சடலம் கையளிக்கப்பட்டது. இன்று இறுதிக் கிரியைகள் நடைபெறும். (இ)


## MIDDLE EAST VACANCIES

கீழ்க்காணும்தொழிலாளர்கள் பாஸ்போட்,படம், தகைமை சான்றிதழ்களுடன் 25-2.80 முதல் 27-2-80 வரை காலை 9-00 மணி-மாலை 6-00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

**Carpenters - Masons**
**Painters - Labourers**
**Steel Fixers - Pipe Fitters**
(சாரதி லைசென்ஸ் வைத்திருப்போர் விரும்பப்படுவர்)
**Electricians - House maids**
(முஸ்லிம்கள் விரும்பப்படுவர்)
**Cooks**

மேற்குறிப்பிட்ட பதவிகளில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவம் தேவை

26, மேல்மாடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
L. Licence No. 37) (5)51)

**வடஇலங்கை கைத்தொழிலாளர்களே! விவசாயிகளே!! பாவனையாளர்களே!!! வியாபாரிகளே!!!!**

உங்கள் தேவைகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொண்டு, பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.
நியாயவிலையில் பொருட்களை கொள்முதல் செய்யலாம்.

★ HERMES - "கேர்மெஸ்' தட்டச்சுயந்திரங்கள் சகல அளவுகளிலும்,

★ UNION- யூனியன்- 250 கிலோகிரும் மேடைத்திராசு
மெற்றிக் அளவுமுறை படிகள்: றுத்தல் படிகளை மெற்றிக் முறையில் மாற்றம் செய்யும்வசதி.

★ DUCO - DULUX-PENTALITE-றெபியலக் பெயின்ற்வகைகள் எல்லா வர்ணங்களும்

ALOHA சொகுசான நடைக்கும் நீடித்த பாவனைக்கும் அலோகா சிலிப்பர்கள்

—சகல இடங்களிலும் விற்பனையாளர்கள் தேவை—

**HAMILTON BICYCLE RS. 800-00 ONLY** ..[இந்திய தயாரிப்பு]

விவசாய இரசாயன தெளிகருவிகள், நீரிறைக்கும் யந்திரங்கள், எஸ்-லோன் பைப்புகள், கல்குலேட்டர்கள், பூட்டுக்கள், மின்னியல் பொருட்கள் அனைத்திற்கும்

# சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்.

206, 208, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம். தொலைபேசி: 462

(தரத்தின் சின்னமாகத் திகழும் நிறுவனம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org